



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 192 23.02.2026 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 192 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(23–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–11
பிறை: வளர்பிறை
திதி
சஷ்டி காலை 10.08 வரை
பிறகு சப்தமி
நட்சத்திரம்:
பரணி மாலை 5.25 வரை
பிறகு கார்த்திகை
யோகம்
சித்த/மரணயோகம்
ராகுகாலம்
காலை 7.30–9.00 மணி
எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி.
சூலம் – கிழக்கு
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 3–4 மணி

| | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | இன்பம் |
| மிதுனம் | அமைதி |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | ஆதரவு |
| கன்னி | உற்சாகம் |
| துலாம் | நட்பு |
| விருச்சிகம் | பெருமை |
| தனுசு | ஆக்கம் |
| மகரம் | புகழ் |
| கும்பம் | அனுகூலம் |
| மீனம் | பக்தி |




# ஏ.ஐ. உச்சி மாநாட்டில் ரூ.24 லட்சம் கோடி முதலீடுகள் உறுதி:

## அமெரிக்கா, சீனா உள்பட 86 நாடுகள் ஆதரவுடன் பிரகடனம் ஏற்பு

**புது தில்லி,பிப்.23:**

புது தில்லியில் நடைபெற்ற சா்வதேச செயற்கைநுண்ணறிவு (ஏ.ஐ.) தாக்க உச்சி மாநாட்டில் 270 பில்லியன் டாலருக்கும் மேலான (ரூ.24 லட்சம் கோடி) முதலீடுகள் உறுதி செய்யப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேலும், 'அமெரிக்கா, சீனா, பிரிட்டன், கனடா, டென்மாா்க், ஜொ்மனி உள்பட 86 நாடுகள் மற்றும் இரு சா்வதேச அமைப்புகளின் ஆதரவுடன் உச்சி மாநாட்டு பிரகடனம் ஏற்கப்பட்டது; இது, பொருளாதார வளா்ச்சி மற்றும் சமூக நலனுக்கான ஏ.ஐ. பயன்பாட்டில் உலகளாவிய ஒத்துழைப்பைப்பிரதிபலிக்கிறது' என்றும் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் ஏ.ஐ. ஆதிக்கம் பெருகிவரும் சூழலில், தேசியத் தலைநகா் புது தில்லியில் சா்வதேச ஏ.ஐ. தாக்க உச்சிமாநாடு கடந்த திங்கள்கிழமை தொடங்கி 5 நாள்கள் நடைபெற்றது. பிரான்ஸ், பிரேஸில், ஸ்பெயின், சொ்பியா, குரோஷியா, ஸ்விட்சா்லாந்து, இலங்கை, பூடான், மோரீஷஸ் உள்பட பல்வேறு நாடுகளின் தலைவா்கள், 60-க்கும் மேற்பட்ட அமைச்சா்கள்-இணையமைச்சா்கள் என 100-க்கும் மேற்பட்ட அரசு பிரதிநிதிகள் பங்கேற்றனா்.

சுந்தா் பிச்சை (கூகுள்), சாம் அல்ட்மேன் (ஓபன் ஏஐ), பிராட் ஸ்மித் (மைக்ரோசாஃப்ட்) உள்பட சா்வதேச முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள், தலைவா்கள், கல்வியாளா்கள், ஆராய்ச்சியாளா்கள் என 500-க்கும் மேற்பட்ட துறைசாா் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனா்.

**ஏ.ஐ. உச்சி மாநாடு**

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற உலகத் தலைவா்களின் முழு அமா்வில் உரையாற்றிய பிரதமா் மோடி, இந்தியா சாா்பில் மக்களை மையப்படுத்திய 'மானவ்' தொலைநோக்குப் பாா்வையை முன்வைத்தாா். ஏ.ஐ. பயன்பாட்டில் தாா்மிக நெறிமுறை, பொறுப்பான நிா்வாகம், தேசிய இறையாண்மை, அனைவருக்குமான அணுகல்-உள்ளடக்கம், சட்டப்பூா்வ பயன்பாடு ஆகிய 5 அம்சங்களை உள்ளடக்கியதாகும்.




'உலக நாடுகள் ஏற்பு': ஏ.ஐ. உச்சி மாநாடு வெள்ளிக்கிழமை நிறைவடைந்த நிலையில், மத்திய அமைச்சா் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளா்களுக்கு சனிக்கிழமை அளித்த பேட்டியில் கூறியதாவது: பிரதமா் மோடியால் முன்வைக்கப்பட்ட மக்களை மையப்படுத்திய ஏ.ஐ. தொலைநோக்குப் பாா்வை உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஏ.ஐ. வசதிகள் மற்றும் சேவைகள், சமூகத்தில் உள்ள அனைவரையும் சென்றடையும் வகையில் அதற்கான வளங்கள் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும்என்பது அனைவராலும் ஏற்கப்பட்டுள்ளது. 'அனைவருக்கும் நல்வாழ்வு, அனைவருக்கும் மகிழ்ச்சி' என்ற கோட்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளது.

மிகப் பெரிய வெற்றி: ஏ.ஐ. உச்சி மாநாடு, உலகளாவிய கொள்கை வகுப்பாளா்கள், தொழில்துறை தலைவா்கள், தொழில்நுட்ப நிபுணா்களை ஒருங்கிணைத்து, சா்வதேச ஏ.ஐ. நிா்வாகம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் இந்தியாவை முக்கிய நாடாக நிலைநிறுத்தியுள்ளது. ஏ.ஐ. மாநாட்டு கண்காட்சியில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட பாா்வையாளா்கள் பங்கேற்றுள்ளனா். இது, ஏ.ஐ. மீதான உத்வேகத்துடன் உள்நாடு மற்றும் உலகளாவிய ஈடுபாட்டை பிரதிபலிக்கிறது. அனைத்து அமா்வுகளிலும் பங்கேற்பாளா்களின் ஆா்வமும், தரமான உரையாடல்களும் மிகவும் சிறப்புக்குரியதாக இருந்தது.


உள்கட்டமைப்பு தொடா்பான மூலதன ரீதியில் 250 பில்லியன் டாலருக்கு அதிகமாகவும், அதிநவீன தொழில்நுட்பத் துறையில் 20 பில்லியன் டாலா் அளவிலும் முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. ஏ.ஐ. புதிய யுகத்தில் இந்தியாவின் பங்கு குறித்த உலகின் நம்பிக்கையை பிரதிபலித்த இந்த உச்சி மாநாடு மிகப் பெரிய வெற்றியடைந்துள்ளது என்றாா் அவா்.

**புது தில்லி பிரகடனத்தின் 7 முக்கிய அம்சங்கள்**

ஏ.ஐ. தாக்க உச்சி மாநாட்டின் நிறைவாக, புது தில்லி பிரகடனம் ஏற்கப்பட்டது. ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் சா்வதேச ஒத்துழைப்பு, பன்முக ஈடுபாடு, தேசிய இறையாண்மை மதிக்கப்படுதல் மற்றும் நம்பகமான கட்டமைப்பை வலியுறுத்தும் இந்தப் பிரகடனம் 7 முக்கிய அம்சங்களின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. ஏ.ஐ. வளங்கள் ஜனநாயகமயமாக்கல், பொருளாதார வளா்ச்சி-சமூக நலன், பாதுகாப்பான-நம்பகமான ஏ.ஐ., அறிவியலுக்கான ஏ.ஐ., சமூக அதிகாரமளித்தலுக்கான அணுகல், மனித மூலதன மேம்பாடு, மீட்சி-திறன்-புத்தாக்கமிக்க ஏ.ஐ. அமைப்புமுறைகள் ஆகிய 7 முக்கிய அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏ.ஐ.யின் பலன்கள், மனித குலத்துக்கு சமமாக கிடைக்கப் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா, சீனா, பிரிட்டன், ரஷியா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பூடான், பிரேஸில், கனடா, டென்மாா்க், ஜப்பான், இத்தாலி, இஸ்ரேல், அயா்லாந்து, இந்தோனேசியா, ஈரான், கிரீஸ், ஜொ்மனி, பின்லாந்து, மெக்ஸிகோ, மியான்மா், நேபாளம், நியூஸிலாந்து, நாா்வே, ஓமன், பிலிப்பின்ஸ், பெரு, ருமேனியா, ஸ்வீடன், ஸ்விட்சா்லாந்து, தான்சானியா, சிங்கப்பூா், தென்கொரியா, ஸ்பெயின், இலங்கை, உக்ரைன், ஐக்கிய அரபு அமீரகம், ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட நாடுகள் கையொப்பமிட்டுள்ளன.

## மணிப்பூர், அசாமில் ஒரே நாளில் அடுத்தடுத்து நிலநடுக்கம்



**புதுடெல்லி,பிப்.23:**

மணிப்பூரில் நேற்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதிகாலை 1.21 மணியளவில் ரிக்டர் அளவில் 3.4 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 24.26 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 94.30 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.

அசாமின் ஹைலகண்டி பகுதியில் நேற்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. காலை 3.19 மணியளவில் ரிக்டர் அளவில் 3.3 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 29 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 24.50 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 92.52 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.

ஒரே நாளில் மணிப்பூர் மற்றும் அசாமில் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# உலக நாடுகளுக்கு விதித்த வரி 10 சதவீதத்தில் இருந்து 15 சதவீதம் ஆக உயர்வு; டிரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன்,பிப்.23:**



அமெரிக்க ஜனாதிபதியாக குடியரசு கட்சியை சேர்ந்த டிரம்ப், 2-வது முறையாக பதவியேற்றது முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக சீனா, கனடா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு கடுமையான வரிவிதிப்புகளை கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் அமல்படுத்தினார்.

இதனால், இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் ஆடை, ஜவுளி, வேளாண், உணவு சார்ந்த பொருட்களுக்கு 25 சதவீத வரி, அதுதவிர 25 சதவீத கூடுதல் வரி என வரிவிதிப்புகள் கடுமையாக்கப்பட்டன. இதனால், இந்திய ஏற்றுமதி சந்தை பெருமளவில் நெருக்கடியை சந்தித்தது.

இந்தியாவில் உற்பத்தியாகும் பொருட்கள் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும்போது, கடுமையான வரி விதிப்புகளை சந்தித்தன. இந்த நிலையில், அமெரிக்காவுடன் இந்தியா வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு உள்ளது. இதனால், இந்தியாவுக்கான வரிகள் 18 சதவீதம் என்றளவில் குறையும் என கூறப்பட்டது.

இந்த சூழலில், டிரம்ப்பின் வரிவிதிப்புகளுக்கு அமெரிக்காவிலேயே எதிர்ப்பு கிளம்பியது. சில வணிக நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதுதொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. அதில், டிரம்ப்பின் வரி விதிப்புகள் செல்லாது என நீதிபதிகள் தங்களுடைய தீர்ப்பில் தெரிவித்தனர்.

எனினும், இறக்குமதிகளை ஒழுங்குபடுத்த ஜனாதிபதிக்கு அமெரிக்க நாடாளுமன்றம் அதிகாரம் அளித்து உள்ளது. அதன் அடிப்படையிலேயே டிரம்ப் அவற்றை அமல்படுத்தி உள்ளார் என்று துணை ஜனாதிபதி வான்ஸ் கூறினார்.

வரிவிதிப்பதற்கு என ஜனாதிபதி டிரம்ப்புக்கு பிற பரவலான அதிகாரங்கள் உள்ளன. அமெரிக்க தொழிலாளர்களை பாதுகாக்க அவற்றை டிரம்ப் பயன்படுத்துவார். இந்த அரசு நிர்வாகத்தின் வர்த்தக முன்னுரிமைகளை அவர் நவீனப்படுத்துவார் என்றார்.

இதன்படி வர்த்தக சட்டம் 1974, பிரிவு 122-ன் கீழ் 10 சதவீத வரி விதிப்புக்கான உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்டு உள்ளார். இந்த சட்ட பிரிவின்படி, கட்டணம் செலுத்துதலில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடுகட்டும் வகையில் 150 நாட்களுக்கு இறக்குமதி வரியை உயர்த்த டிரம்புக்கு (அதிகபட்சம் 15 சதவீதம்) அதிகாரம் உள்ளது.

இந்த நிலையில், தற்காலிக 10 சதவீத இறக்குமதி வரியானது வருகிற 24-ந்தேதி அதிகாலை 12.01 மணி முதல் நடைமுறைக்கு வரும் என வெள்ளை மாளிகை நேற்று உறுதிப்படுத்தியது.

எனினும், சில பொருட்களுக்கு இதில் இருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டது. ஏனெனில் அவை அமெரிக்க பொருளாதாரத்திற்கு அவசியம் என்ற அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்நிலையில், இரவோடு இரவாக இந்த வரியை 10 சதவீதத்தில் இருந்து 15 சதவீதம் ஆக உயர்த்தி, டிரம்ப் அறிவிப்பு வெளியிட்டு உள்ளார். அமெரிக்க வெள்ளை மாளிகையின் கிழக்கு அறையில் மாகாண கவர்னர்களின் கூட்டம் ஒன்று நேற்றிரவு நடந்தது.

இதில் விருந்தினர்களுக்கு தடபுடலாக இரவு விருந்து நடந்தது. அப்போது நிகழ்ச்சியில் பேசிய டிரம்ப், நான் அமெரிக்க ஜனாதிபதியாக, பல்வேறு உலக நாடுகளுக்கு விதித்திருந்த வரியை 10 சதவீதத்தில் இருந்து உடனடியாக 15 சதவீதம் என்ற சட்ட அதிகாரம் கொண்ட, முழு அளவுக்கு உயர்த்துகிறேன் என கூறினார்.

வருகிற சில மாதங்களில் என்னுடைய அரசு, புதிய மற்றும் அனுமதிக்கப்பட்ட சட்ட ரீதியிலான வரி விதிப்புகளை முடிவு செய்யும். இதனால், அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக ஆக்கும் நடைமுறை வெற்றி பெறும். இதற்கு முன்பு இல்லாத வகையில் சிறந்த நாடாக அமெரிக்கா இருக்கும் என்றார்.வரி விதிப்பு அமலில் டிரம்ப்பின் அதிகாரம் குறைக்கப்படும் வகையில் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு வழங்கினால், வரி விதிப்புக்கான மாற்று வழிகளை கொண்டு அது அமல்படுத்தப்படும் என பல மாதங்களாகவே, வெளிநாட்டு வர்த்தக கூட்டாளிகளுக்கும், வர்த்தக சமூகத்தினருக்கும் டிரம்ப் நிர்வாகம் எச்சரித்து வந்தது கவனிக்கத்தக்கது.

# சிறப்பு தீவிர திருத்தப்பணி நிறைவு: இறுதி வாக்காளர் பட்டியல் இன்று வெளியாகிறது

**சென்னை,பிப்.23:**

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்.ஐ.ஆர்.) கடந்த நவம்பர் மாதம் 4-ந்தேதி தொடங்கியது. எஸ்.ஐ.ஆர். பணிகளை தொடர்ந்து வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 97.37 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டு இருந்தன. இதையடுத்து முன்பு 6.41 கோடி என்றளவில் இருந்த வாக்காளர் எண்ணிக்கை 5.44 கோடி என்றளவில் குறைந்தது.

அதேபோல், இணையதளம் வழியாக 10.28 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்தனர். ஆக மொத்தமாக 34 லட்சத்து 75 ஆயிரத்து 717 பேர் விண்ணப்பித்திருந்தனர். இந்த விண்ணப்பங்களை வாக்காளர் பதிவு அலுவலர்கள் மூலம் சரி செய்யும் பணி கடந்த 10-ந்தேதி நிறைவடைந்தது.

இந்த நிலையில் இறுதி வாக்காளர் பட்டியல் இன்று (23-02-2026) வெளியிடப்பட உள்ளது. மாவட்டங்களில் இன்று காலை 10 மணிக்கு மேல் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். பின்னர் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், மாநிலம் முழுவதும் உள்ள இறுதி வாக்காளர் பட்டியல் தரவுகளை வெளியிடுகிறார்.



## விடுமுறை தினம், முகூர்த்த நாள் திருச்செந்தூர் கோவிலில் குவிந்த பக்தர்கள்



**தூத்துக்குடி, பிப்.23:**
முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து முருகனை தரிசனம் செய்கின்றனர்.

விடுமுறை நாட்களிலும், திருவிழா காலங்களிலும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து மட்டுமல்லாது வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் திருச்செந்தூர் வந்து முருகனை தரிசனம் செய்வார்கள்.

இந்த நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விடுமுறை தினத்தை முன்னிட்டு பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்த பக்தர்கள் கோவில் முன்புள்ள கடலில் புனித நீராடி கோவிலில் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். இதனால் 100 ரூபாய் கட்டணம் தரிசனம், பொது தரிசன வரிசை மற்றும் மூத்த குடிமக்களுக்கான சிறப்பு தரிசன வரிசைகளில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

காலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. தொடர்ந்து சுவாமிக்கு விஸ்வரூப தீபாராதனை, அபிஷேக ஆராதனைகள் நடந்தது. அதைத்தொடர்ந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

மேலும் நேற்று மாசி மாத வளர்பிறை முகூர்த்த தினத்தை முன்னிட்டு கோவில் முன்புள்ள சண்முக விலாஸ் மண்டபத்தில் 25-க்கும் மேற்பட்ட திருமணங்கள் நடைபெற்றது. இதனால் கோவில் வளாகத்தில் பக்தர்கள் கூட்டம் மற்றும் திருமணத்திற்கு வந்தவர்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.

## சினிமா வேறு, அரசியல் வேறு..! தயாரிப்பாளர் சங்க தேர்தலில் எல்.கே.சுதீஷ் அதிரடி பதில்

**சென்னை, பிப்.23:**
தயாரிப்பாளர் சங்க தேர்தலில் தே.மு.தி.க. பொருளாளர் எல்.கே.சுதீஷ் வாக்களித்தார். பின்னர் வெளியே வந்த அவர் நிருபர்களிடம் கூறுகையில், "நான் 25 வருடங்களாக தயாரிப்பாளராக இருக்கிறேன். ஒவ்வொரு தேர்தலிலும் ஜனநாயக கடமையை ஆற்றிக் கொண்டிருக்கிறேன். விஜயகாந்த் இருக்கும் போதும் வந்து வாக்களித்துள்ளேன்" என்றார்.



அப்போது அவரிடம் நிருபர்கள், "தி.மு.க. கூட்டணிக்கு மே.தி.மு.க. போனதால் விஜயகாந்த் ஆன்மா மன்னிக்காது என்று எதிர்க்கட்சியினர் சொல்கிறார்களே" என்று கேள்வி எழுப்பினார்கள்.

அதற்கு அவர், "அரசியல் இங்கு பேச வேண்டாம், இது சினிமா நிகழ்ச்சி' என்று கூறி விட்டு அங்கிருந்து சென்றார்.

## திருமாவளவனை சந்தித்து தனது மகளின் திருமண நிச்சயதார்த்த அழைப்பிதழ் வழங்கிய செல்வப்பெருந்தகை



**சென்னை, பிப்.23:**
தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தனது மகள் திருமண நிச்சயதார்த்த விழாவிற்கான அழைப்பிதழை முதலமைச்சர் ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்களுக்கு வழங்கி அழைப்பு விடுத்து வருகிறார்.

அவ்வகையில் விசிகதலைவர் திருமாவளவனுக்கு தனது மகள் திருமண நிச்சயதார்த்த விழாவிற்கான அழைப்பிதழை செல்வப்பெருந்தகை நேரில் வழங்கி அழைப்பு விடுத்தார்.

இது தொடர்பான புகைப் படங்களை செல்வப்பெருந்தகை தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அந்த பதிவில், "விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களுக்கும் அவரது தாயார் பெரியம்மாள் அவர்களுக்கும் இன்று 22.02.2026 எனது மகளின் நிச்சயதார்த்த அழைப்பிதழை வழங்கினேன்" என்று தெரிவித்தார்.

## தமிழகத்தில் பெண்களால் ஆட்சி மாற்றம் ஏற்படும் - அன்புமணி

**தருமபுரி, பிப்.23:**
தருமபுரி அருகே வெள்ளாளப்பட்டி பஞ்சாயத்தில், எம்.பி., தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, திருமணம் மண்டபம் கட்ட, 80 லட்சம் ரூபாயை, பா.ம.க. தலைவர் அன்புமணி நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்.



இதில், ஒன்றிய பொதுநிதி மற்றும் ஒன்றிய கவுன்சிலர் நிதி உட்பட, 1.14 கோடி ரூபாய் மதிப்பில், திருமண மண்டபம், உணவருந்தும் கூடம், சுகாதார வளாகம் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டது. அதை, பா.ம.க. தலைவர் அன்புமணி திறந்து வைத்தார். அதை தொடர்ந்து, நிருபர்களிடம் அவர் கூறியதாவது:-


தேர்தல் நேரத்தில் பணம் கொடுப்பது, பொங்கலுக்கு, 3,000 ரூபாய் கொடுப்பது என, மக்களை தி.மு.க., அரசு ஏமாற்றி வருகிறது. தி.மு.க. ஆட்சியில் பெண்கள் ஆண்டு முழுவதும் தான் பாதிக்கப்படுகின்றனர்.

அதற்கு பணம் கொடுத்து விட்டால் தீர்வாகி விடாது. மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, வளர்ச்சி தான் தேவை. கடந்த, 2021-ல், தி.மு.க. அளித்த, 505 தேர்தல் வாக்குறுதியில், 66 மட்டும் நிறைவேற்றி உள்ளனர். தி.மு.க. ஆட்சியில் மிகப் பெரிய ஊழல் நடந்துள்ளது.

2026 சட்டசபை தேர்தலில், தி.மு.க., அ.தி.மு.க., கூட்டணி இடையே தான் போட்டி. தமிழகத்தில் பெண்களால், அரசியல் மற்றும் ஆட்சி மாற்றம் ஏற்படும்.

# எந்த மாநிலத்தில்? எந்த அரசு அதிக ஊழல் செய்கிறதோ? அந்த மாநிலத்தில் அதிக ரெய்டுகள் நடக்கத்தான் செய்யும்

### த.மா.க தலைவர் ஜி.கே.வாசன் பேட்டி





**மானாமதுரை, பிப் .23:**
சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் கட்சி பிரமுகர் இல்ல விழாவில் பங்கேற்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஜி.கே.வாசன்செய்தியாளர்க்ளை சந்திக்கையில் எந்த மாநிலத்தில்? எந்த அரசு அதிக ஊழல் செய்கிறதோ? அந்த மாநிலத்தில் அதிக ரெய்டுகள் நடக்கத்தான் செய்யும் என பேட்டியளித்தார். திருப்புவனத்தை சேர்ந்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாநில தொண்டரணி தலைவர் அயோத்தி இல்ல திருமண விழாவில் அதன் தலைவர் ஜி.கே. வாசன் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்.

அதன் பின் செய்தியாளர் களை சந்தித்த ஜி.கே. வாசன் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில் மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் விவசாய நீர் பாசனத்திற்காக ஒதுக்கிய தொகை 40 சதவீதம் மற்றும் கூடுதலாக மாநில அரசின் 60% பங்கீடு இதனை பாசன மேம்பாட்டு திட்டம் செய்யப்படாமல் கடத்தி மூன்று வருட காலமாக பயன்படுத்தாமல் செலவு செய்யாமல் மத்திய அரசிடமே திருப்பி அனுப்பிய அரசு தமிழக அரசு என்றால் விவசாய வர்க்கத்திற்கு துரோகம் செய்த அரசு இந்த தமிழக அரசு என நான் குறிப்பிட விரும்புகிறேன்.

என்றும் மேலும் இந்தியா விலேயே அதிகபட்சம் கடன் வாங்கிய மாநிலமாக 10.60 லட்சமாக நமது தமிழகத்தின் திராவிட மாடல் அரசு சாதனை புரிந்துள்ளது.ஒவ்வொரு தமிழ் குடிமகன் தலையிலும் 1.30 லட்சம் கடனை சுமத்தியதுதான் இந்த அரசின் 5 ஆண்டு கால சாதனையாக உள்ளது. அதேபோல் மாநில அரசின் தனி வரி அதிமுக ஆட்சி காலத்தில் இருந்ததைவிட இரண்டு மடங்காக மக்களிடம் வரி வசூல் செய்யப்படுகிறது.

ஆனால் எந்த விதத்திலும் முறையாக சரியாக வெளிப்படை தன்மையோடு செலவு செய்வது கிடையாது என்பதை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். எனவும் தெரிவித்ததுடன் தேர்தல் முகவர்கள் என்ற பெயரிலே லட்சக்கணக்கானோரை அழைத்து கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து திமுக அரசு தங்களுடைய தவறுகளை மறைப்பதற்காக கூட்டங்கள் மூலம் மக்களை ஏமாற்ற நினைக்கிறது மக்கள் இனிமேல் ஒருபோதும் திமுக அரசிடம் ஏமாற தயாராக இல்லை கடந்த ஐந்தாண்டு காலம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசாக மட்டும் திமுக இல்லாமல் காத்து கிடந்த மக்களை வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்கிற எதிர்பார்த்து நம்பிக்கையோடு காத்துக் கிடந்த மக்களை ஏமாற்றிய அரசு இந்த திமுக அரசு என்பதை மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் அதற்கு பரிசாக தங்களுடைய நேர்மறை வாக்குகளை இந்த தேர்தலிலே திமுக அரசுக்கு எதிராக அளிக்க வாக்காளர்கள் தயாராகி விட்டார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். எனவும் பேசினார்.

மேலும்தென் மாநிலங் களிலேயே சட்டம் ஒழுங்கு அதிக அளவில் சீர்குலைந்த மாநிலமாக திராவிட மாடல் தமிழக அரசு செயல்பட்டு கொண்டிருக்கிறது. கொலை, கொள்ளை, திருட்டு, பாலியல் போன்றவைகள் தொடர்கிறது. போதை பொருள் நடமாட்டம் அதிகரித்துக் கொண்டு போகிறது. இதை கட்டுப்படுத்த முடியாத அரசாக இந்த அரசு ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்திக் கொண்டிருப்பது மிகப்பெரிய தலைகுனிவாக தமிழகத்திற்கு உள்ளது. என்பதை தெரிவிக்க விரும்புகிறேன் எனவும் பேசிய அவர் இந்தநாடு சரத்திற்கு உட்பட்ட நாடு சட்டத்தின் அடிப்படையிலேயே செயல்படக்கூடிய நாடு தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் எந்த பொறுப்பில் இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் அதுதான் நியாயம் நீதி குறிப்பாக தேர்தல் காலங்களில் இது போன்ற சந்தேகங்கள் ஏற்படும் போது மக்கள் அரசாங்கத்தை கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன் என பேசியதுடன் என்.டி.ஏ கூட்டணி என்றால் மத்தியில் என்.டி.ஏ தமிழகத்தில் அதிமுக தலைமையில் தற்போது தமிழகத்தின் முதன்மை கூட்டணி வெற்றி கூட்டணியாக மக்கள் மத்தியில் உலா வந்து கொண்டிருக்கிறது.


தமிழக மக்களின் நம்பிக்கையை பெற்ற கூட்டணி இந்த கூட்டணி கூட்டணியின் வெற்றி மிக பிரகாசமாக இருக்கிறது இரண்டாவது அணி மூன்றாவது அணி புதிய கூட்டணி நாளை மறுநாள் சேரப் போகின்ற கூட்டணியை பற்றி எல்லாம் எங்களுக்கு கவலை இல்லை எங்களது கூட்டணி முதல் கூட்டணி வெற்றி கூட்டணி அதற்குப் பிறகுதான் இரண்டு மூன்று நான்கு எல்லாம் தற்போது இதுதான் தமிழக வாக்காளர்களுடைய மனநிலையாக உள்ளது என்றும் பேசினார் அதனை தொடர்ந்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத அரசு மட்டுமல்ல சாதாரண மக்கள் மீது வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்த்த மக்கள் மீது தொடர்ந்து வரிச் சுமையை ஏற்றிய அரசுதான் இந்த அரசு அப்படி இருக்கும்போது இன்றைக்கு நடந்த சம்பவம் மாற்றுத்திறனாளிகள் மீது அடிதடி ரகளை அதேபோல அங்கன்வாடி பணியாளர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றாமல் அவர்களை அழைக்கலைப்பது இவையெல்லாம் இந்த அரசுக்கு வாடிக்கையாக்கிவிட்டது.

காரணம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற தவறிய அரசுக்கு மக்கள் கோரிக்கையைப் பற்றி கவலையே இருக்காது எனவும் பேசிய அவர் எந்த மாநிலத்திலே? எந்த அரசு அதிக ஊழல் செய்கிறதோ? அவர்கள் மீது அதிகமான ரைடுகள் இதுபோன்று நடக்கத்தான் செய்யும் இதில் ஒன்றும் மாற்று கருத்து இருக்க முடியாது வெளிப்படுத்தன்மையோடு அரசின்பொறுப்பில்இருப்பவர்கள் செயல்படவில்லையோ? அவர்கள் மீது இது போன்ற நடவடிக்கைகள் இருக்கத்தான் செய்யும் இதுதான் நியாயம் நீதி. எல்லா கட்சிகளுக்கும் இது பொருந்தும் என்றும் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான தொண்டர்கள் பங்கேற்றனர்.

## 70வது ஃபிலிம்ஃபேர் விருதுகளை குவித்த தமிழ் படங்களின் முழு பட்டியல்..!

**திருவனந்தபுரம், பிப்.23:**
70வது ஃபிலிம்ஃபேர் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று (பிப். 21) கேரளா மாநிலத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், தென்னிந்திய திரையுலகின் சிறந்த திரைப்படங்கள், இயக்குநர், நடிகர் உள்பட பல்வேறு பிரிவுகளின் கீழ் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு ஃபிலிம்ஃபேர் விருது வழங்கப்பட்டது.

இதில், தமிழ் திரைப்படங்கள் வென்ற ஒட்டுமொத்த விருதுகளின் விவரங்களை தொடர்ந்து பார்ப்போம்..,




சிறந்த திரைப்படம் - அமரன்
சிறந்த இயக்குநர் - பி.எஸ். வினோத்ராஜ் (கொட்டுக்காளி), ராஜ்குமார் பெரியசாமி (அமரன்)
சிறந்த திரைப்படம் (விமர்சகர்) - மெய்யழகன் (பிரேம்குமார்)
சிறந்த நடிகர் (முதன்மை பாத்திரம்) - சிவகார்த்திகேயன் (அமரன்)
சிறந்த நடிகர் (விமர்சகர்) - அரவிந்த சாமி (மெய்யழகன்)
சிறந்த நடிகை (முதன்மை பாத்திரம்) - சாய் பல்லவி (அமரன்)
சிறந்த நடிகை (விமர்சகர்) - அன்னா பென் (கொட்டுக்காளி)
சிறந்த நடிகர் (குணச்சித்திரம்) - கார்த்தி (மெய்யழகன்)
சிறந்த நடிகை (குணச்சித்திரம்) - சுவாசிகா (லப்பர் பந்து)
சிறந்த இசை ஆல்பம் - ஜி.வி. பிரகாஷ் குமார் (அமரன்)
சிறந்த பாடலாசிரியர் - உமா தேவி (யாரோ இவன் யாரோ - மெய்யழகன்)
சிறந்த பாடகர் (ஆண்) - ஹரிச்சரண் (ஹே மின்னலே - அமரன்)
சிறந்த பாடகர் (பெண்) - ஸ்வேதா மோகன் (ஹே மின்னலே - அமரன்)
சிறந்த அறிமுக இயக்குநர் - சுரேஷ் மாரி (ஜெ பேபி), தமிழரசன் பச்சமுத்து (லப்பர் பந்து)
சிறந்த அறிமுக நடிகர் - ரிது ஹரூன் (தக்ஸ்)
சிறந்த அறிமுக நடிகை - ஸ்ரீ கௌரி பிரியா (லவ்வர்)
சிறந்த ஒளிப்பதிவு - சி.ஹெச். சாய் (அமரன்)
தலைச்சிறந்த நடிப்பு - விக்ரம் (தங்கலான்)

## 8 ஃபிலிம்ஃபேர் விருதுகள்... அமரன் படக்குழு வெளியிட்ட சர்ப்ரைஸ் வீடியோ




**சென்னை, பிப்.23:**
ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இன்டர்நேஷனல் தயாரிப்பில் இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி மற்றும் நடிகர் சிவகார்த்திகேயன், சாய் பல்லவி நடிப்பில் வெளியான திரைப்படம் "அமரன்." வசூலிலும், விமர்சன ரீதியிலும் பெரும் வரவேற்பை பெற்ற "அமரன்" திரைப்படம் சமீபத்தில் நடைபெற்ற 70வது ஃபிலிம்ஃபேர் விருது வழங்கும் விழாவில் 8 பிரிவுகளின் கீழ் விருதுகளை குவித்துள்ளது.

ஃபிலம்ஃபேர் சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குநர், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த இசை ஆல்பம், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த பின்னணி பாடகர், சிறந்த பின்னணி பாடகி உள்பட எட்டு பிரிவுகளின் கீழ் அமரன் திரைப்படம் விருது வழங்கப்பட்டுள்ளது.

70வது ஃபிலிம்ஃபேர் விழாவில் 8 விருதுகளை குவித்ததை ஒட்டி அமரன் படக்குழு சார்பில் சர்ப்ரைஸ் வீடியோ வெளயிடப்பட்டுள்ளது. இதில், "சினிமா மற்றும் போட்டிகளை கடந்த அமரன்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

## த.வெ.க. தலைவர் விஜய் பெரம்பூரில் போட்டியிட தீர்மானம் நிறைவேற்றம்,

**சென்னை, பிப்.23:**
சென்னைவியாசர்பாடியில் பெரம்பூர் சட்டசபை தொகுதி த.வெ.க. செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.



இந்த கூட்டத்தில் சட்டசபை தேர்தலில் த.வெ.க. தலைவர் விஜய் பெரம்பூர் தொகுதியில் போட்டியிட வேண்டும் என்று தேர்தல் பிரசார மேலாண்மைப் பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா தீர்மானத்தை முன்மொழிந்தார்.

தான் முன்மொழிந்த தீர்மானத்தை பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வழிமொழிவார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

எந்த தொகுதியில் வளர்ச்சி இல்லையோ அந்த தொகுதியில் நிற்பேன் என விஜய் கூறி இருந்த நிலையில் விஜய் பெரம்பூர் தொகுதியில் போட்டியிட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## திமுகவின் கோட்டையான பெரம்பூரில் விஜய் போட்டியிட்டால் வெற்றி பெறமுடியுமா?

**சென்னை, பிப்.23:**
சென்னைவியாசர்பாடியில் பெரம்பூர் சட்டசபை தொகுதி த.வெ.க. செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் சட்டசபை தேர்தலில் த.வெ.க. தலைவர் விஜய் பெரம்பூர் தொகுதியில் போட்டியிட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒருவேளை பெரம்பூர் தொகுதியில் விஜய் போட்டியிட்டால் வெற்றி பெறமுடியுமா?

தற்போது பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக திமுகவை சேர்ந்த ஆர். டி. சேகர் உள்ளார். 2021 தேர்தலில் அதிமுகவை வீழ்த்தி 52.93% வாக்குகள் பெற்று ஆர். டி. சேகர் அபார வெற்றி பெற்றார்.

1962க்கு பிறகு பெரம்பூர் தொகுதியில் நடைபெற்ற 14 தேர்தல்களில் 1991, 2001, 2011,2016 ஆகிய தேர்தல்களை தவிர மற்ற 10 தேர்தல்களில் திமுக தான் வெற்றி பெற்றுள்ளது.

ஆகவே திமுகவின் கோட்டையான பெரம்பூர் தொகுதியில் விஜய் போட்டியிட்டால் வெற்றி பெறுவது சற்று சிரமம் தான் என்பதை கடந்த கால தேர்தல் முடிவுகள் காட்டுகிறது.

## "ஹலோ ஆண்ட்டி, அங்கிள்.." மீண்டும் கிரிக்கெட் வர்ணனைக்கு திரும்பும் ஆர்.ஜே. பாலாஜி..!

**சென்னை, பிப்.23:**
ஆர்.ஜே.-வாக இருந்து நடிகர் மற்றும் இயக்குநர் அவதாரம் எடுத்தவர் ஆர்.ஜே. பாலாஜி. இடையில் கிரிக்கெட் வர்ணனையாளராக இருந்த ஆர்.ஜே. பாலாஜி கருப்பு திரைப்பட பணிகள் காரணமாக வர்ணனை செய்யாமல் இருந்தார். இந்த நிலையில், ஆர்.ஜே. பாலாஜி மீண்டும் கிரிக்கெட் வர்ணனை செய்ய இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.



தற்போது டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெற்று வரும் நிலையில், இந்தியா மற்றும் ஜிம்பாப்வே அணிகள் மோதும் போட்டியில் ஆர்.ஜே. பாலாஜி தமிழில் வர்ணனை செய்ய இருக்கிறார். இதனை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் X தளப் பதிவின் மூலம் அதிகாரப்பூர்மாக உறுதிப்படுத்தி இருக்கிறது.

ஆர்.ஜே. பாலாஜி மீண்டும் கிரிக்கெட் வர்ணனையில் ஈடுபடுவது ரசிகர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலம், இவர் மீண்டும் வர்ணனை செய்வதை ஒட்டி நடிகர் சூர்யாவின் கருப்பு திரைப்படம் விரைவில் ரிலீசாகலாம் என்றும் கூறப்படுகிறது.


START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


Vilambaram
GET...
SET.....
SHOOT
YOUR SALES
WITH SOCIAL
MEDIA
ASK US HOW ?
CONTACT US TODAY!
+91-7789941009
www.vilambaram.com


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


Vilambaram
www.vilambaram.com
We are the Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certified
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

## கவிதை அரங்கம்!





விடைப்பெறட்டும்
நாணம்
விடைத்தருகிறேன்
நானும்
உன் பார்வையின்
கேள்விக்கு


உலகை
காட்டியது
பெற்றோரென்றாலும்
அதை ரசிக்க
வைத்துக்கொண்டிருப்பது

நீ...!

உன் சிறுத்துளி
நினைவு போதுமென்
அகம் முகம் மகிழ...!

உதிர்ந்திடுமுன்
கொய்தெறிந்துவிட்ட
மலருக்காக
கண்ணீர் வடிக்கின்றது
வானம்...!

## வாழ்க்கை தத்துவம்...



வாழ்க்கை பேசாது
ஆனால் அது கற்றுக்கொடுக்கிறது

நேரம் எல்லாவற்றையும் மாற்றும்
ஆனால் உண்மையான மனசை
மாற்ற முடியாது


சில தூரங்கள் நம்மை பிரிக்காது
அவை நம்மை
புரிந்துகொள்ள வைக்கும்

உண்மையாக வாழ்வது எளிதல்ல
ஆனால் அது அமைதியானது

எவ்வளவு காயப்பட்டாலும்
நாளை மீண்டும் மலரும்
மனமே வாழ்க்கை

மௌனம் கூட
சில நேரம் வாழ்க்கையின்
மிகச் சிறந்த பதில்

## பிசினஸ் மேன்



சமீபகாலமாக சுதாகரின் நடவடிக்கையில் பெரிய மாற்றம் தெரிந்தது. தன் கடைக்கு வரும் நண்பர்களை உபசரிப்பதை விடுத்து, அவர்களை விரட்டியடிப்பதிலேயே அவன் குறியாக இருப்பதைக்கண்டு நண்பர்கள் வருத்தமடைந்தனர். "என்ன மச்சான் இது? முன்னாடி எல்லாம் கடைக்கு 'வாடா வாடா'ன்னு கூப்பிடுவ... வந்தா டீ, காபி குடுத்து உபசரிப்ப... ஆனா இப்ப ஏண்டா எங்களை பார்த்தாலே பிடிக்காதது போல நடந்துக்கிற?" என்று நேரடியாகவே கேட்டுவிட்டான் சுரேஷ்.

சுதாகர் ஒரு போலிப் புன்னகையுடன், "தப்பா நினைச்சுக்காதடா சுரேஷ்... கடைக்கு இப்போ பெண்கள் நிறைய வராங்க. நீங்க ஆம்பளைங்க எல்லாம் கூட்டமா நின்னுகிட்டு இருந்தா, அவங்க வர்றதுக்குத் தயங்குறாங்க. அதனாலதான் கிளம்பச் சொன்னேன்," என்று சொல்லி லாவகமாக அவர்களை அனுப்பி வைத்தான்.

நண்பர்கள் அங்கிருந்து நகர்ந்ததும், சுதாகர் கல்லாவில் அமர்ந்து பணத்தை எண்ணத் தொடங்கினான். இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த டீ மாஸ்டர் மெல்லக் கேட்டார், "என்ன முதலாளி... வந்த நண்பர்களை இப்போதெல்லாம் விரட்டி அனுப்புறீங்களே ஏன்?" சுதாகர் ஒரு மர்மமான சிரிப்புடன், "அதெல்லாம் பிசினஸ் ரகசியம் மாஸ்டர்... உனக்குச் சொன்னாலும் புரியாது," என்று கத்தரித்தான்.

உண்மையில் அவன் மனதுக்குள் வேறு ஒரு கணக்கு ஓடிக்கொண்டிருந்தது. ஆரம்பத்தில் கடை தொடங்கியபோது, அங்கே ஒரு கடை இருப்பதே பலருக்குத் தெரியவில்லை; வியாபாரமும் சூடுபிடிக்கவில்லை. ஈயடிக்காமல் இருக்க கடையை 'பிஸியாக' காட்ட வேண்டும் என்பதற்காகவே, தன் நண்பர்கள் பத்து பேரைத் தினசரி கடையிலேயே அரட்டை அடிக்க வைத்து, அவர்களுக்கு இலவசமாக டீ பிஸ்கட் கொடுத்து உட்கார வைத்திருந்தான். சாலையில் போவோர் வருவோர் எல்லாம், "இந்தக் கடையில் எப்போதும் கூட்டமாக இருக்கிறதே! அப்போ இங்கே சுவை நன்றாக இருக்கும் போல..." என்று எண்ணி உள்ளே வரத் தொடங்கினர். சுதாகர் போட்ட அந்தப் 'பிசினஸ் தூண்டில்' சரியாக வேலை செய்தது. அனைவருக்கும் அந்த கடை தெரிய ஆரம்பித்தது . கூட்டத்தை ஈர்த்து, இப்போது கடை பெரிய லாபத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது.

இப்போது கல்லா நிறையத் தொடங்கிவிட்டது, இனி அவர்களுக்கு இங்கே இடமில்லை. அவர்களுக்கு இலவச டீ கொடுத்து என் லாபத்தை ஏன் குறைக்க வேண்டும்? அடுத்து ஏதாவது பிரான்ச் ஆரம்பித்தால் நண்பர்களுக்கு கூட்டிக் கொள்ளலாம்" என்று மனதிற்குள் கணக்குப் போட்டான் சுதாகர்.

சுதாகர் சுயநலவாதி இல்லை பக்கா பிசினஸ் மேன்

—

**ஜனனி அந்தோணி ராஜ்,**
திருச்சிராப்பள்ளி.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*"ஒன்னுமே தெரியாத ஸ்டூடண்ட் (STUDENTS ) கிட்ட கொஸ்டின் பேப்பர் (QUESTIONS PAPERS ) கொடுக்குறாங்க..."*

*"எல்லாம் தெரிஞ்ச வாத்தியார் கிட்ட ஆன்சர் பேப்பர்(ANSWER PAPERS ) கொடுக்குறாங்க..."*

*"என்ன கொடும சார் இது?...."*



## தினம் ஒரு சமையல்



### வறுத்தரைத்த சிக்கன் கிரேவி

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| 1/2 கிலோ | - சிக்கன் |
| 100 கிராம் | - சின்ன வெங்காயம் |
| 1 | -தக்காளி |
| 2 | - பச்சைமிளகாய் |
| 1-1/2 டீஸ்பூன் | - இஞ்ணி பூண்டு விழுது |
| தேவையானஅளவு | -நல்லெண்ணைய் |
| தேவையானஅளவு | - உப்பு |
| சிறிதளவு | - மல்லிதழை |

**வறுத்து அரைக்க**

| | |
|---|---|
| 1-1/2 டீஸ்பூன் | - மல்லி |
| 2 டீஸ்பூன் | - மிளகு |
| 1 டீஸ்பூன் | - சீரகம் |
| 1 துண்டு | - பட்டை |
| 2 டீஸ்பூன் | - தேங்காய் துருவல் |
| 1 டீஸ்பூன் | - மிளகாய்தூள் |

**செய்முறை:**



வறுத்து அரைக்க தேவையான பொருட்களை வெறும் வாணலியில் இளந்தீயில் வறுத்து கொள்ளவும்.

மிளகாய் தூள் வறுக்க தேவையில்லை அடுப்பை அணைத்த பின்னர் வறுத்த மசாலா பொருட்களோடு சேர்க்கவும்

வாணலியல் எண்ணெய் ஊற்றி காய்ந்த பின் வெங்காயம் சேர்த்து சிவக்க வதக்கி,தக்காளி சேர்த்து வதக்கவும்.

நன்கு வதங்கிய பின்னர் இஞ்சி,பூண்டு விழுது சேர்த்து பச்சை வாணை நீங்கும் வரை வதக்கி வறுத்து அரைத்த மசாலா சேர்த்து வதக்கவும்.

சிறிதளவு தண்ணீர் சேர்த்து வேகவைக்கவும்.சிக்கன் 3/4 பாகம் வெந்த பின்னர் சிறுதீயில் வைத்திருந்து,வெந்து எண்ணெய் பிரிந்த பின் இறக்கவும்.

## மாதுளை பயன்கள்



"மாதுளம்பழம், பூ, பட்டைனு எல்லாமே மருத்துவ குணங்கள் நிறைஞ்சதுதான். மாதுளையில இனிப்பு, புளிப்பு, துவர்ப்புனு மூனுவகை சுவைகளும் இருக்கு. செரிமானப் பிரச்சனைகளைச் சீராக்கி, உடல் எடை குறைக்க மாதுளை உதவுது. சர்க்கரைநோயை கட்டுப்படுத்துறதுக்கு துணைபுரியுது.

மாதுளையை காலையில வெறும் வயித்துல சாப்பிட்டா, வயிற்றுப்புண் ஆறும், உடலுக்கு நல்ல ஆரோக்கியம் தரும்.

திருமணமான பெண்களுக்கு கருவுறுவதில் பிரச்சனை இருந்தா, தினமும் காலையில வெறும் வயித்துல மாதுளம்பழம் சாப்பிட்டுவரலாம். இதனால ஹார்மோன் குறைபாடுகள் நீங்கி, கர்ப்பப்பை ஆரோக்கியமா இருக்கும்.

மாதுளை ஜூஸை தொடர்ந்து 30 நாட்கள் குடிச்சி வந்தா, மாதவிடாய் பிரச்சனை சரியாகும். இரத்தத்தில ஹீமோகுளோபின் அளவு அதிகரிக்கறதுக்கு மாதுளை உதவுது.

மாதுளையை விதையோட சாப்பிடும் போது நல்ல ஆரோக்கிய பலன்கள் இருக்குது. மாதுளை விதையில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கல் பிரச்சனை வராமல் தடுக்குது. மாதுளை விதையிலிருந்து வயது முதிர்வை தடுக்கக்கூடிய சீரம் தயாரிக்கப்படுவதா சொல்றாங்க. அதனால மாதுளையை விதையோட சாப்பிடும் போது இளமை நீடித்திருக்க நமக்கு அது உதவும்.

"சரி பாட்டி, மாதுளையில நம்ம அழகை அதிகப்படுத்துவதற்கான தன்மைகள் இருக்கா? கொஞ்சம் சொல்லுங்க!" மாதுளையின் பயன்களை முழுமூச்சாகச் சொல்லிக்கொண்டிருந்த பாட்டியிடம் இடைமறித்துக் கேட்டேன்.

உன்னோட பியூட்டி கான்ஷியஸ்னசுக்கு ஒரு அளவே இல்லாம போச்சு! ஆனாலும் மாதுளையில நம்ம சரும அழகை மேம்படுத்தக்கூடிய கூறுகள் இருக்கறது உண்மைதான், சொல்றேன் கேட்டுக்கோப்பா..!

மாதுளை பழத்தோல்ல அதிக ஆன்டிஆக்ஸிடண்டும் ஊட்டச்சத்துகளும் இருக்கிறதுனு ஆய்வுகள் சொல்லுது. சருமத்தை பொலிவா பராமரிக்க மாதுளம்பழத் தோல் உதவும். இனி நீ மாதுளம்பழத் தோலை தூக்கிப் போடமாட்டேன்னு நினைக்கிறேன்.




## ரஜினி OR கமல்.. யார் ஹீரோ? டீசரிலேயே HINT இருக்கு பாருங்க



ரஜினிகாந்த் மற்றும் கமல்ஹாசன் இருவரும் திரையில் இணையும் KH x RK Reunion படத்தின் ப்ரோமோ வெளியாகி மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

மாஸ் லுக்கில் ரஜினி மற்றும் கமல் இருவரும் அதில் தோன்றி இருக்கின்றனர். இருவரும் ஒன்றாக காரில் ஏறி செல்வது போல தான் டீசரில் காட்டப்பட்டு இருந்தது.

இதில் ஹீரோ யார் என டீசரின் இறுதியில் கமல் கேள்வி எழுப்பி இருப்பார்.

இந்த கேள்விக்கு பதிலை அந்த வீடியோவிலேயே HINT ஆக வைத்திருக்கிறார் இயக்குனர் நெல்சன். கமல், ரஜினி இருவரது பெயரும் வரும் இடத்தில் தான் அந்த HINT இருக்கிறது.

கமல்ஹாசன் பெயரின் AN என்ற எழுத்துக்கள் மட்டும் வேறு நிறத்தில் இருக்கிறது. அதே போல ரஜினிகாந்த் பெயரில் H என்ற எழுத்து மட்டும் வேறு நிறத்தில் காட்டப்பட்டு இருக்கிறது.

அதனால் வில்லனாக (Antago-nist) ஆக கமல் மற்றும் ஹீரோவாக ரஜினி ஆகியோர் நடிக்கிறார்கள் என நெட்டிசன்கள் கூறி வருகிறார்கள்.



நடிகை சமீரா ரெட்டி சிவப்பு நிற உடையில் எடுத்துக்கொண்ட தனது ரீசன்ட் புகைப்படங்கள் தற்போது இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன. இதோ அந்த புகைப்படங்கள்:

## கில்லி - துணிவு படங்களின் ரீ ரிலீஸ் வசூல்.. பாக்ஸ் ஆபீஸ் ரிப்போர்ட்




புதிய படங்களுக்கு இணையாக ரீ-ரிலீஸ் படங்களுக்கும் ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு இருக்கிறது. கில்லி, சச்சின், மங்காத்தா, படையப்பா போன்ற படங்கள் ரீ-ரிலீஸில் மாபெரும் சாதனை செய்தன.

இதில் 2024ஆம் ஆண்டு ரீ-ரிலீஸ் செய்யப்பட்ட கில்லி தற்போது இரண்டாவது முறையாக கடந்த 20ஆம் தேதி ரீ-ரிலீஸ் செய்யப்பட்டது. அதே தேதியில் அஜித்தின் பிளாக்பஸ்டர் படமான துணிவு ரீ-ரிலீஸ் ஆனது.

இந்த இரண்டு படங்களையும் ரசிகர்கள் திரையரங்கில் கொண்டாடி வரும் நிலையில், வசூல் விவரங்கள் வெளியாகியுள்ளது. விஜய்யின் கில்லி படம் இரண்டாவது முறையாக ரீ-ரிலீஸ் ஆகியுள்ள நிலையில், இதுவரை உலகளவில் ரூ. 1.2 கோடி வசூல் செய்துள்ளது.

மேலும் அஜித்தின் துணிவு திரைப்படம் இதுவரை பாக்ஸ் ஆபீஸில் ரூ. 50 லட்சம் வசூலித்துள்ளது. இனி வரும் நாட்களில் இப்படங்கள் எவ்வளவு வசூல் செய்யப்போகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# "சகடாசுரன்"



தேவகியின் சகோதரனான கம்சன் கண்ணனை எப்படியாவது கொள்ள வேண்டும் ,என முடிவெடுத்து ஒரு அசுரனை கோகுலத்திற்கு அனுப்புகிறான். அவன்தான் சகடாசுரன். "சகடம்" என்றால் வண்டி, சக்கரம் என்று பொருள்.

அன்று கோகுலத்தில் கோலாகலம். கண்ணன் முதல் முறையாக கவிழ்ந்து தவழ ஆரம்பித்தான். என்ன, ஒரு சந்தோஷம் !!ஊரே கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். யசோதையும், கோபியர்களும் , நந்தகோபர் மற்றும் ஆடவரும் சந்தோஷமாக கொண்டாடிக் கொண்டிருந்தனர். எல்லோரும் சாப்பிடுவதற்காக உணவு சமைப்பதும், மரியாதை செய்வதும், வீட்டை அலங்காரம் செய்வதிலும், அனைவரும் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். குழந்தை கண்ணன் பசியால் காலை உதைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தான். அவனது அழுகை யசோதையின் காதில் விழவில்லை. குழந்தை மெல்ல தவழ்ந்து அங்கு நின்று கொண்டிருந்த வண்டியின் அடியில் சென்று விட்டது .அங்கு வந்த சகடாசுரன் தக்க தருணத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். கண்ணனை கொல்வதற்கான நல்ல சமயம் இதுதான் என்று அங்கு நின்ற வண்டியில், தனது சக்தியை புகுத்தி, குழந்தை கண்ணனை கொல்லுவதற்காக சக்கரம் நகர ஆரம்பித்தது. கண்ணன் தன் பிஞ்சு காலால் ஒரு உதை விட்டவுடன் வண்டி உடைந்து சாய்ந்தது. அந்த சத்தத்தை கேட்டு எல்லோரும் ஓடி வந்து பார்த்தனர். குழந்தைக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று பயந்து, யசோதை குழந்தையை தூக்கினாள். அங்கு வந்து பார்த்தவர்களுக்கு ஆச்சரியம் .இந்த வண்டி எப்படி? இப்படியானது ?என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அங்கிருந்த சில கோபியர்கள் குழந்தை தனது காலால் உதைத்ததை நாங்கள் பார்த்தோம். கண்ணனின் கால் பட்டவுடன் இந்த வண்டி உடைந்தது அந்த அரக்கனும் சுக்கு நூறாக சிதறி விட்டான். வண்டியில் ஒளிந்து கொண்டு ,கண்ணனை கொல்ல வந்த அசுரன், கண்ணனால் கொல்லப்பட்டார் .என்ற உண்மை வெளிப்பட்டது. குழந்தைக்கு ஏதாவது கண் திருஷ்டி பட்டு விட்டதோ என எண்ணி குழந்தைக்கு திருஷ்டி சுத்தினார் .கண்ணன் சிரித்தபடியே சகடாசுர வதம் என்னும் லீலை யை நடத்தினார். அவனுடைய லீலைகளில் இதுவும் ஒன்று .இந்த செய்தி கம்சனின் காதுக்கு சென்றது .ஒரு சிறிய குழந்தையை இந்த அசுரனால் கொல்ல முடியவில்லையே! என்பதைவிட ,தான் தோற்று விட்டோமே, என்று அவனுடைய கோபம் அதிகமானது. கம்சன் அடுத்ததாக பலம் பொருந்திய வேறு ஒரு அரக்கனை அனுப்ப திட்டமிட்டான்.



எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம், சென்னை.

# தினம் ஒரு தலைவர்கள் உதம்சிங் வரலாறு

உதம்சிங் 26 டிசம்பர் 1899 31 ஜூலை 1940) ஒரு இந்திய புரட்சியாளர். ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்த்திய மைக்கல் ஓ'ட்வையரை 1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சுட்டுக் கொன்றவர்.

இளமைக்காலம்
ஜலியான்வாலாபாக் படுகொலைக்குக் காரணமான துணை ஆளுநர் மைக்கல் ஓ'ட்வையர் என்பவரை நிகழ்ச்சி நடந்து 21 ஆண்டுகளுக்குப் பின்னர் சுட்டுக்கொன்றவர் உதம் சிங் ஆவார். இவர் 1899- ஆம் ஆண்டு டிசம்பர் 26- ஆம் நாள் பஞ்சாப் மாநிலத்தில் சங்க்ரூர் மாவட்டத்தில் சுனாம் கிராமத்தில் பிறந்தவர். பெற்றோர் இவரின் இளம் வயதிலேயே இறந்துவிட்டனர். பின்னர் ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார். அதுவரை அவரது பெயர் ஷேர்சிங். அங்குதான் உதம் சிங் என்று பெயர் மாற்றப்பட்டது. 1918 இல் மெற்றிக்குலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

ஜலியான்வாலாபாக் படுகொலையும் உதம் சிங்கின் சபதமும்
1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13- ஆம் நாள் ஜலியான்வாலா பாக் படுகொலை நடந்த அன்று உதம் சிங்கும் அவரது ஆசிரம நண்பர்களும் கூட்டத்திற்கு தண்ணீர் வழங்கும் பணியைச் செய்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் கலைந்து செல்லவும் வழியில்லாமல் நடத்தப்பட்ட படுகொலை அவரைக் கடுமையாகப் பாதித்துவிட்டது. அவர் இச்சம்பவத்திற்குப் பழிவாங்க பொற்கோவிலில் சபதம் பூண்டார்.

அவர் பல்வேறு பெயர்களுடன் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்தார். 1920 இல் ஆப்பிரிக்காவிற்கும் 1921 இல் நைரோபிக்கும் சென்றுவிட்டு 1924 இல் இந்தியா திரும்பினார். ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்றார். சோஹன்சிங் வாக்னா, கர்த்தார்சிங் சாரபா, லாலா ஹர்தயாள், ராஷ்பிஹாரி போஷ் போன்றோரால் உருவாக்கப்பட்ட கதர் கட்சியில் இணைந்தார். கதர் கட்சி வெளிநாடுவாழ் இந்தியர்களால் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்டது. அமெரிக்காவில் மூன்றாண்டுகள் தங்கி இந்திய விடுதலைப் போராட்டத்திற்குப் பாடுபட்டார். 1927 இல் பகத் சிங் அழைத்ததால் இந்தியா திரும்பினார். 1927 இலேயே அனுமதியின்றி ஆயுதங்களை வைத்திருந்ததற்காகவும் கதர் கட்சி பிரசுரங்கள் வைத்திருந்ததற்காகவும் கைது செய்யப்பட்டு கடுங்காவல் தண்டனை பெற்றார். 1931 இல் விடுதலை ஆனார்.

சபதம் நிறைவேற்றுதல்
மூன்றாண்டுகள் மைக்கல் ஓ'ட்வையரை கொலை செய்யும் திட்டத்துடன் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1933- ல் காஷ்மீர் சென்று ஜெர்மனிக்குத் தப்பிவிட்டார். அவர் இத்தாலி, பிரன்ஸ், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா வழியாக 1934- ல் லண்டனை அடைந்தார். மைக்கல் ஓ'ட்வையரை கொல்ல சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் காத்திருந்தார். 1940- ஆம் ஆண்டு மார்ச் 13 அன்று ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்து 21 ஆண்டுகள் கழித்து அந்த சந்தர்ப்பம் கிடைத்தது. கேக்ஸ்டன் ஹால் என்ற இடத்தில் கிழக்கிந்திய சங்கம், மத்திய ஆசிய சங்கம் இவற்றின் கூட்டம் நடந்தது. [6] மைக்கேல் ஓ டையர் ஒரு பேச்சாளர். சிங் ஒரு புத்தகத்தில் ரிவால்வர் மாதிரியே வெட்டி அதனுள் ரிவால்வரை வைத்து எடுத்துச் சென்றார். சுவரின் அருகில் நின்றார். கூட்ட முடிவில் டையர் மேடையை நோக்கிச் செல்லும் போது இருமுறை சுட்டார். டையர் உடனே இறந்துவிட்டார். மீண்டும் சுட்டதில் ஜெட்லாந்து, லூயிஸ்டேன், லார்டு லாமிங்க்டன் ஆகியோர் காயமுற்றனர் . சிங் தப்பிக்க முயற்சி செய்யவில்லை. மைக்கேல் ஓ டையர் படுகொலை குறித்த கருத்துக்கள் ஸ்காட்லாந்துயார்டு அருங்காட்சியகத்தில் அவரது கத்தி, ஆயுதம், டைரி, துப்பாக்கிக்குண்டுகள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன.



ஆளுநர் டையரின் கொலை இந்தியாவில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. மக்கள் மைக்கேல் ஓ டையரின் கொடும் செயலை மறக்கவில்லை . வழக்கம் போல் காந்திஜி அவரது செயலைக் கண்டித்தார் . ஆனால் வரலாற்று ஆய்வாளர்கள் 1942- ல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு போராட்டத்திற்கு உத்தம் சிங்கால் ஏற்பட்ட உணர்ச்சி மிகவும் உதவியது என்று கூறுகின்றனர்.

நேதாஜி சிங்கின் செயலை வரவேற்றார். R.C. ஜாகர்வாரா தனது "CONSTITUTIONAL HISTORY OF INDIA AND NATIONAL MOVEMENT" என்ற நூலில் சிங்கின் தீரச்செயல் இந்திய சுதந்திரத்திற்குப் புத்துணர்வு ஊட்டியது என்று எழுதியுள்ளார். இந்திய அரசாங்கத்தின் இரகசிய குறிப்பு ஆளுநர் டையரின் கொலை மக்களுக்கு மிகுந்த திருப்தியை அளித்தது என்று கூறுகிறது[10]. உலகம் முழுவதும் செய்தித்தாள்கள் ஜாலியன் வாலாபாக் படுகொலையை நினைவுகூர்ந்து மைக்கேல் ஓ டையர்தான் இதற்குப் பொறுப்பாளி என்று எழுதின. டைம்ஸ் ஆஃப் லண்டன் என்ற பத்திரிக்கை உத்தம்சிங் சுதந்திரப் போராட்ட வீரர் என்றும் அவரது செயல் ஒடுக்கப்பட்ட இந்தியரின் உணர்ச்சி வெளிப்பாடு என்றும் எழுதியது.

1940- ஆம் ஆண்டு ஜாலியன் வாலாபாக் படுகொலை 21- ஆவது நினைவு காங்கிரஸ் கூட்டத்தில் உத்தம் சிங் மிகவும் போற்றப்பட்டார். பஞ்சாப் காங்கிரஸ் டையருக்கு அஞ்சலி செலுத்தவும் உத்தம் சிங் செயலைக் கண்டிக்கவும் மறுத்துவிட்டது. அக்காலத்தில் ரோம் நகரில் அதிகம் வெளியான பெர்கெரெட் (BERGERET) என்ற பத்திரிக்கை சிங்கின் செயலை தீரச்செயல் என்று பாராட்டியது. ஜெர்மனி வானொலி ஒடுக்கப்பட்ட மக்கள் குண்டுகளால் பேசிவிட்டனர் என்றும் இந்தியர்கள் யானையைப்போல எதிரிகளை மன்னிக்கவே மாட்டார்கள் என்றும் 20 ஆண்டுகள் கழித்தும் அவர்கள் பழிதீர்த்துவிட்டார்கள் என்றும் கூறியது. பெர்லின் பத்திரிக்கை உத்தம் சிங் இந்திய சுதந்திரத்தின் வழிகாட்டி என்று கூறியது. இந்துசுத்தான் சோசலிசக் குடியரசு அமைப்பு பகத் சிங் மற்றும் உத்தம் சிங்கின் செயல் குறித்த காந்திஜியின் விமர்சனத்தைக் கண்டித்தது. தூக்குத் தண்டனை உத்தம் சிங் சிறையில் 42 நாள் உண்ணாவிரதம் இருந்தார். அவர் கட்டாயப்படுத்தி உணவு உண்ண வைக்கப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் "நான் அவரைப் பழிவாங்க எண்ணியிருந்தேன். அவர் அதற்குப் பொருத்தமானவர்தான்" என்று கூறினார் . 1940- ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று அவர் பென்டோன்வில் சிறைச்சாலையில் அவர் தூக்கிலிடப் பட்டார். அன்று மதியமே அவரது உடல் சிறைச்சாலை வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

இந்திய அரசின் அஞ்சலி நேருஜி 1962-ல் சிங்கின் செயலைப் பாராட்டி அவர் போன்றவர்களால்தான் இந்தியா சுதந்திரம் அடைந்தது என்று கூறினார். 1974- ல் சாதுசிங் திண்ட் என்ற சுல்தான்பூர் லோதி வேண்டுகோளுக்கிணங்கி இந்திய அரசு கேட்டுக்கொண்டதால் பிரித்தானிய அரசு உத்தம் சிங்கின் சவப்பெட்டியை அனுப்ப சம்மதித்தது. சாதுசிங் திண்ட் சென்று உத்தம் சிங்கின் சவப்பெட்டியை வாங்கிவந்தார். அதனை காங்கிரஸ் தலைவர் சங்கர் தயாள் சர்மா, பஞ்சாப் முதல்வர் ஜெயில் சிங் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். பிரதமர் இந்திரா காந்தி மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அவரது சொந்த கிராமமான சுனாம் கிராமத்தில் அவரது உடல் எரியூட்டப்பெற்று சட்லஜ் நதியில் அஸ்தி கரைக்கப்பட்டது.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை திங்கள்கிழமை 23.02.2026

# அஜித் பவார் உயிரிழப்பு: அமைச்சரை பதவி நீக்க பிரதமருக்கு கடிதம்

**மும்பை, பிப்.23:**

பிரதமர் நரேந்திர மோடிக்கு தேசியவாத காங்கிரஸ் கட்சியின் (சரத் பவார்) பொதுச் செயலரும், எம்எல்ஏவுமான ரோஹித் பவார் எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது: மகாராஷ்டிர துணை முதல்வர் அஜித் பவார் சென்ற விமானம் விபத்துக்குள்ளானதில் பவார் உட்பட 5 பேர் உயிரிழந்தனர். அந்த விமானம் விஎஸ்ஆர் நிறுவனத்துக்குச் சொந்தமானது.

அந்த நிறுவனத்துக்கும், மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடுவுக்கும் தொடர்புகள் உள்ளன.

எனவே, அவரை பதவியில் இருந்து ராஜினாமா செய்யுமாறு வலியுறுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

# சபரிமலை தங்கம் திருட்டு வழக்கு: தந்திரிக்கு எதிராக சாட்சியமில்லை - நீதிமன்றம் தகவல்



**கொல்லம், பிப்.23:**

கேரளமாநிலம்சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கம் கொள்ளை தொடர்பான 2 வழக்குகளில் கோயில் தந்திரியான கண்டரரு ராஜீவரு திருவனந்தபுரம்மத்தியசிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், ராஜீவருவின் ஜாமீன் மனு மீதான விசாரணை கொல்லம் குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. மனுவை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு ஜாமீன் வழங்கியது. விசாரணையின்போது நீதிமன்றத்தில் தந்திரியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், "உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி 2018-ல் சபரிமலை ஐயப்பன் கோயிலில் பெண்கள் நுழைந்து தரிசனம் செய்ய கேரள மாநில அரசு அனுமதித்தது.

இதற்கு அப்போது கண்டரரு ராஜீவரு கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக இந்த தங்கத் திருட்டு வழக்கை கேரள அரசு அதிகாரிகள் தொடர்ந்துள்ளனர்" என்று தெரிவித்தார். இந்நிலையில்தான் ஜாமீனில் ராஜீவரு வெளியே வந்துள்ளார்.

மேலும் இந்த வழக்கில் கண்டரரு ராஜீவருக்கு எதிராக எந்தச் சாட்சியமும் இல்லை என்று கொல்லம் குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இது கேரள அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது.

கண்டரரு ராஜீவருவை வேண்டுமென்றே கேரள போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தியதாகவும், இது பழி வாங்கும் நடவடிக்கை என்றும் கேரளாவில் உள்ள எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. இந்த தங்கம் திருட்டு வழக்கில் முன்னாள் தேவஸ் வம் போர்டு அமைச்சர் கடக்கம்பள்ளி சுரேந்திரன் சம்பந்தப்பட்டுள்ளார் என்றும், அதை திசைதிருப்பவே தந்திரி கண்டரரு ராஜீவருவை கேரள போலீஸார் கைது செய்துள்ளனர் என்றும் பாஜக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. கண்டரரு ராஜீவருவை கைது செய்தது தொடர்பாக கேரள அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அக்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

# திடக்கழிவு மேலாண்மைக்கான விதிகளை வெளியிட்டது உச்ச நீதிமன்றம்!

**புதுடெல்லி, பிப்.23:**



திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக நாடு முழுமைக்கும் புதிய விதிகளை உச்ச நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.


போபால் மாநகராட்சியின் சுற்றுச்சூழல் விதிகளுக்கு எதிரான தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் 2 உத்தரவுகளை எதிர்த்து தாக்கலான 2 மேல்முறையீட்டு மனுக்கள், உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் பங்கஜ் மித்தல், எஸ்.வி.என். பாட்டீ ஆகியோரை கொண்ட அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:

திடக்கழிவு விவகாரத்தில் அலட்சியமாக இருப்பது, நமது உடல் நலனை பாதிக்கும். நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கும். சுத்தம் மற்றும் தூய்மையான சுற்றுச்சூழல் ஆகியவை வாழ்வதற்கான உரிமையில் பிரிக்க முடியாத அங்கமாகும். ஆதலால் திடக்கழிவு மேலாண்மை விவகாரத்தில் தற்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லையேல், இனி எப்போதும் எடுக்க முடியாமல் போய்விடும்.

எந்த நடவடிக்கையும் எடுக்காமல், நாம் இந்த பிரச்னை சரியாகிவிடும் என எதிர்பார்ப்பது சரியாக இருக்காது. கழிவு இல்லாத சுத்தமான இந்தியாவை உருவாக்குவது நம் அனைவரின் கடமையாகும். சுற்றுச்சூழலை பாதுகாப்பதும், குடிமக்களின் நலனை காப்பதும் மாநில அரசின் கடமை என நீதிமன்றங்கள் திரும்பத் திரும்ப தெரிவித்து வருகின்றன. ஆட்சியர்கள் மூலம் ஆய்வு: திடக்கழிவு நிர்வகிப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியர்கள் மூலம் ஆய்வு செய்யப்பட வேண்டும். அப்போது பிரச்னைகளை மாவட்ட ஆட்சியர்கள் கண்டறிந்து, அதற்கு தீர்வு காண எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை காலவாரியாக தலைமை செயலாளரிடம் அவர் அறிக்கை மூலம் தெரியப்படுத்த வேண்டும். மேலும் உள்ளாட்சி அமைப்புகளிடம் மாவட்ட ஆட்சியர்கள், திடக்கழிவு தொடர்பான விதிகளை 100 சதவீதம் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும். திடக்கழிவு தொடர்பான விதிகள் ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வருகிறது. இந்த விதிகள் தொடர்பான உச்ச நீதிமன்ற உத்தரவு நகலை, கழிவுகளை அதிகம் ஏற்படுத்துவோருக்கு உள்ளாட்சி அமைப்புகள் வழங்கி, மார்ச் 31-ஆம் தேதிக்குள் அதற்கு கட்டுப்பட வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

# இந்தியாவில் நஷ்டம் அதிகரித்தாலும் முதலீட்டை அதிரிக்கும் ஸ்டார்பக்ஸ்!

**புதுடெல்லி, பிப்.23:**




இந்தியாவில் நிலவும் கடும் போட்டி மற்றும் அதிகரித்து வரும் நஷ்டத்துக்கு மத்தியிலும், டாடாவுடன் இணைந்து தனது வர்த்தகத்தை விரிவுபடுத்துவதில் அமெரிக்காவின் ஸ்டாாபக்ஸ் நிறுவனம் தீவிரம் காட்டி வருகிறது.

உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடான இந்தியாவில், லாபத்தைவிட சந்தை விரிவாக்கத்துக்கே தற்போது முன்னுரிமை அளிப்பதாக டாடா-ஸ்டாாபக்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுஷாந்த் தாஷ் தெரிவித்துள்ளாா.

உலக அளவில் ஸ்டாாபக்ஸ் நிறுவனத்தின் முக்கிய ஐந்து சந்தைகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ள நிலையில், இந்த அதிரடி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024-25 நிதியாண்டில், டாடா ஸ்டாா்பக்ஸ் நிறுவனத்தின் நஷ்டம் இரண்டு மடங்கு அதிகரித்து ரூ.150 கோடியை எட்டியுள்ளது. இருப்பினும், வருவாய் 4.8 சதவீதம் உயா்ந்துள்ளதால் நிறுவனம் நம்பிக்கையுடன் உள்ளது.

இந்தியாவில் உள்நாட்டு நிறுவனங்களுடனான கடும் போட்டியை எதிா்கொள்ள, உள்ளூா் மக்களின் ரசனைக்கேற்ப தங்களின் விற்பனைப் பட்டியலில் (மெனு) ஸ்டாா்பக்ஸ் அதிரடி மாற்றங்களைச் செய்துள்ளது.

தற்போது இந்தியா முழுவதும் 81 நகரங்களில் 504 கிளைகளுடன் இயங்கி வரும் இந்நிறுவனம், மும்பையில் வடா பாவ் வகை பன்களையும், தென்னிந்தியாவில் மலபாா் முட்டை ரோஸ்ட் போன்ற உணவுகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தகைய மாற்றங்களால், கடந்த 2 காலாண்டுகளின் நிறுவனத்தின் விற்பனை 3 சதவீதம் வளா்ச்சி கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# உ.பி.: ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் சடலங்களாக மீட்பு

**புதுடெல்லி, பிப்.23:**

உத்தரப் பிரதேசத்தில் பூட்டப்பட்ட வீட்டிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம், காஸ்கஞ்ச் பகுதியில் உள்ள வீடு ஒன்று கடந்த மூன்று நாட்களாக பூட்டப்பட்டிருப்பதை அக்கம்பக்கத்தினர் கண்டனர். உடனே இதுகுறித்து போலீஸாருக்கு அவர்கள் தகவல் கொடுத்தனர். நிகழ்விடத்துக்கு விரைந்த போலீஸார், வீட்டின் கதவை உடைத்து பார்த்தனர்.

வீட்டினுள் 5 பேரின் சடலங்கள் இருப்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். சத்யவீரின் சடலம் கயிறு ஒன்றில் தொங்கிய நிலையில் காணப்பட்டது. மீதமுள்ள நான்கு சடலங்களும் படுக்கையில் ஒரு போர்வையின் கீழ் காணப்பட்டன. தடயவியல் குழு மற்றும் மோப்ப நாய் படை சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டது.

முதல்கட்ட விசாரணையில், சத்யவீர் தனது குடும்பத்தின் மற்றவர்களைக் கொன்றுவிட்டு பிறகு தானும் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிகிறது.

சடலங்களை மீட்டு போலீஸார் கூராய்வுக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மரணத்திற்கான காரணம் கண்டறிய வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# 10 ஆண்டுகளாக சிறுவர்களை சீரழித்து 2 லட்சம் ஆபாச வீடியோக்களை விற்ற உ.பி. தம்பதிக்கு மரண தண்டனை

**பண்டா, பிப்.23:**

உத்தர பிரதேச மாநிலத்தின் நீர்வளத் துறையில் இளநிலை பொறியாளராகப் பணியாற்றியவர் ராம் பவன். இவரது மனைவி துர்காவதி. இருவரும் பண்டா மற்றும் சித்ரகூடம் பகுதியில் கடந்த 2010-ம் ஆண்டு முதல் 2020-ம் ஆண்டு வரையில் சிறிய அறையை வாடகைக்கு எடுத்து தங்கி வந்துள்ளனர்.

அந்த 10 ஆண்டுகளில் சிறுவர்களை தங்கள் வீட்டுக்கு அழைத்து வீடியோ கேம் விளையாட வைப்பது, அவர்களுக்கு சாக்லேட்டுகள் வழங்குவது, பரிசு வழங்குவது என பழக்கப்படுத்தி உள்ளனர்.

பின்னர் சிறுவர்களை ஆபாச படம் எடுத்துள்ளனர். இதுபோல் 33 சிறுவர்களை ராம்பவன் மற்றும் துர்காவதி இருவரும் ஆபாச படம் எடுத்து 40-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விற்பனை செய்து வந்துள்ளனர். ஒரு கட்டத்தில் இவர்களுடைய சட்டவிரோத செயல்கள் வெளியில் தெரிய வந்தது.

போலீஸார் உடனடியாக களத்தில் இறங்கி விசாரணை நடத்தினர். அப்போது, அவர்கள் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆபாச வீடியோக்கள் எடுத்ததும், அதில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 18 வயதுக்கு குறைவானவர்கள் என்பதும் சிலர் 3 வயதுக்குட்பட்டவர்கள் என்பதும் தெரிய வந்தது.

இதுதொடர்பாக அவர்கள் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சிபிஐ அதிகாரிகளும் தீவிர விசாரணை நடத்தி வந்தனர். இந்த வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.


அப்போது ராம் பவன் வீட்டில் சோதனை நடத்திய போது கைப்பற்றப்பட்ட வீடியோக்கள், ஆதாரங்கள், ரொக்கப்பணம் போன்றவற்றை விசாரணை குழுவினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். இந்த வழக்கில் பண்டா மாவட்ட சிறப்பு நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை 163 பக்கத்தில் தீர்ப்பளித்தது.

இந்த வழக்கு அரிதிலும் அரிதானது என்று மாவட்ட கூடுதல் செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி பிரதீப் குமார் மிஸ்ரா தெரிவித்தார்.

ராம் பவன் மற்றும் அவரது மனைவி துர்காவதிக்கு போக்சோ சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். அத்துடன் பாதிக்கப்பட்ட 33 சிறுவர்களுக்கும் உ.பி. அரசு தலா ரூ.10 லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும்.

அத்துடன் ராம்பவன் வீட்டில் பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கப் பணத்தையும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சரிசமமாகப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று நீதிபதி மிஸ்ரா உத்தரவிட்டார்.

# கொச்சி மெட்ரோ ரயில் தூணில் சிக்கிய பூனை மீட்பு



**திருவனந்தபுரம், பிப்.23:**

கேரள மாநிலம், கொச்சி மெட்ரோ ரயிலின் தூணில் சிக்கிய பூனை நீண்ட போராட்டத்துக்குப் பிறகு பத்திரமாக மீட்கப்பட்டது.

தீயணைப்பு மற்றும் மீட்பு சேவை அதிகாரிகள் கூறுகையில், கலூரில் உள்ள ஜவஹர்லால் நேரு அரங்கம் மெட்ரோ நிலையம் அருகே ஒரு தூணில் பூனை இருப்பதை அந்தப் பகுதியில் உள்ள ஆட்டோ ஓட்டுநர்கள் கவனித்தனர். உடனே பூனையை மீட்க வியாழக்கிழமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் அதை கண்டுபிடிக்க முடியவில்லை. தொடர்ந்து, பூனையை மீட்க விலங்குகள் மீதான வன்கொடுமை தடுப்பு சங்கம் சனிக்கிழமை முயற்சிகள் மேற்கொண்டது. ஆனால், பூனை கர்டரில் உள்ள இடைவெளிகளுக்குள் நகர்ந்து சென்றது. மேலும் ஹைட்ராலிக் கிரேனில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவர்கள் செயல்பாட்டை இடைநிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பின்னர், தீயணைப்பு மற்றும் மீட்பு சேவை ஊழியர்கள் மாலையில் மற்றொரு முயற்சியை மேற்கொண்டனர். கொச்சி மெட்ரோ ரயில் லிமிடெட் அதிகாரிகள் 15 நிமிடங்களுக்கும் மேலாக மின் இணைப்பை துண்டித்து பூனையை மீட்க ஒத்துழைப்பு அளித்தனர். இருந்தபோதிலும், பூனையைக் கண்டுபிடிக்க முடியாததால் அந்த முயற்சியும் தோல்வியடைந்தது. பூனை, உயிர்வாழ தூணின் மேல் அதிகாரிகள் உணவை விட்டுச் சென்றனர். அதற்குள், விலங்கு ஆர்வலர்கள் சம்பவ இடத்திற்கு வந்து மீட்புப் பணியைத் தொடருமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர். பின்னர், சனிக்கிழமை இரவு கொச்சி மெட்ரோ நிர்வாகத்தின் தினசரி நடவடிக்கைகள் முடிவடைந்த பிறகு, நள்ளிரவில் பூனையைக் கண்டுபிடித்து மீட்க மீண்டும் ஒரு புதிய முயற்சி தொடங்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1 மணியளவில் மீட்புப் பெட்டி மற்றும் வலைகளுடன் கூடிய இரண்டு பணியாளர்கள் தூணின் உச்சியை அடைந்து, பூனையைக் கண்டு அதை மீட்டனர். திரைப்படமான 'மஞ்ஞுமல் பாய்ஸ்' கதாபாத்திரத்தின் நினைவாக பூனைக்கு ஆட்டோ ஓட்டுநர்கள் "சுபாஷ்" என்று பெயரிட்டனர்.

# தெலுங்கானா பா.ஜ.க. தலைவர் வீட்டு காவலில் வைப்பு

**ஐதராபாத், பிப்.23:**

தெலுங்கானாவின் காமாரெட்டி நகரில் கடந்த 2 நாட்களாக பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சியின் தொண்டர்களுக்கு இடையே மோதல்கள் ஏற்பட்டன. இது வன்முறையாக மாறியது. ஒருவர் மீது ஒருவர் கற்களை வீசி தாக்கி கொண்டனர். இதில் ஆர்ப்பாட்டத்தின்போது, காங்கிரஸ் தலைவர் ஒருவரின் வாகனம் நேற்று கவிழ்க்கப்பட்டது. கற்கள் வீசப்பட்டதில் அக்கட்சி தொண்டர்கள் சிலர் காயமடைந்தனர். இதன்பின்னர், நடந்த சம்பவத்திற்கு பழி வாங்கும் வகையில், பா.ஜ.க. எம்.எல்.ஏ. கதிபள்ளி வெங்கட ரமணா ரெட்டியின் முகாம் அலுவலகம் மீது காங்கிரஸ் தொண்டர்கள் தாக்குதல் நடத்தி அடித்து, நொறுக்கினர். பன்ஸ்வாடா பகுதியில் பா.ஜ.க. தொண்டர்களும் கற்களால் வீசி தாக்கப்பட்டனர் என தகவல் தெரிவிக்கின்றது.

இந்த சம்பவங்களில் காயமடைந்த கட்சி தொண்டர்களை இன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூற தெலுங்கானா பா.ஜ.க. தலைவர் என். ராமசந்திர ராவ் திட்டமிட்டு இருந்துள்ளார். இதற்காக காமாரெட்டி நகருக்கு செல்லும் முடிவில் இருந்துள்ளார். இதனால், பதற்றம் அதிகரிக்க கூடும் என்ற நோக்கில் தடுப்பு நடவடிக்கையாக நேற்றிரவு அவரை போலீசார் வீட்டு காவலில் வைத்து உள்ளனர். இதனை அவர் தொலைபேசி வழியே நிருபர்களிடம் பேசும்போது தகவலாக தெரிவித்து உள்ளார்.

# துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் அடுத்த வாரம் காஷ்மீர் பயணம்

**ஸ்ரீநகர், பிப்.23:**

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் ஸ்ரீநகரில் காஷ்மீர் பல்கலைக்கழகம் உள்ளது. இந்த பல்கலைக்கழகத்தில்கீழ் பல்வேறு கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றனர். இதனிடையே, காஷ்மீர் பல்கலைக்கழகத்தின் 21வது பட்டமளிப்பு விழா வரும் 26ம் தேதி நடைபெற உள்ளது. இந்த பட்டமளிப்பு விழாவில் காஷ்மீர் பல்கலைக்கழகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளில் கல்வி பயின்ற 59 ஆயிரத்து 558 மாணவ, மாணவியருக்கு வரும் 26ம் தேதி பட்டம் வழங்கப்பட உள்ளது.

இந்நிலையில், காஷ்மீர் பல்கலைக்கழத்தின் பட்டமளிப்பு விழாவில் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார். இதற்காக அவர் அடுத்த வாரம் வியாழக்கிழமை (பிப். 26) காஷ்மீர் செல்ல உள்ளார். துணை ஜனாதிபதி வருகையையொட்டி காஷ்மீரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, காஷ்மீர் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் ஜம்மு-காஷ்மீர் கவர்னர் மனோஜ் சின்ஹா, முதல்-மந்திரி உமர் அப்துல்லா, பல்கலைக்கழக வேந்தர் நிலோபர் கான் உள்பட பலர் கலந்துகொள்ள உள்ளனர்.

# திருப்பதி லட்டு கலப்பட விவகாரம்; ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் திசைதிருப்புகிறது - சந்திரபாபு நாயுடு

**அமராவதி, பிப்.23:**

கடந்த 2024 ஆம் ஆண்டு ஆந்திராவில் நடந்த தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தின்போது, முந்தைய ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ஆட்சியின்போது திருப்பது ஏழுமலையான் கோவிலில் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும் லட்டுகளை தயாரிப்பதற்கு தரமற்ற பொருட்கள், ரசாயனங்கள் மற்றும் விலங்கு கொழுப்புகளை பயன்படுத்தியதாக குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த குற்றச்சாட்டுகள் நாடு முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், கோடிக்கணக்கான இந்துகளின் உணர்வுகள் புண்படுத்தப்பட்டுள்ளதாக அப்போதைய ஆந்திர மாநில எதிர்க்கட்சிகள் கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தன. இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டு சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணைக்கு உத்தரவிட்டது. அந்த குழுவினர் தங்கள் விசாரணையை நிறைவு செய்து அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர். இந்த நிலையில், திருப்பதி லட்டு கலப்பட விவகாரத்தில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தங்கள் மீதான குற்றத்தை திசைதிருப்ப பார்க்கிறது என ஆந்திர மாநில முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வினுகொண்டா பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது;-

"திருப்பதி லட்டு கலப்பட விவகாரத்தில் இருந்து தப்பிக்க, ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியினர் தங்கள் மீதான குற்றத்தை மற்றவர்கள் மீது திசைதிருப்ப பார்க்கிறார்கள். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. லட்டுகளை தயாரிப்பதற்கு திருப்பதி தேவஸ்தானத்திற்கு வழங்கப்பட்ட நெய் சுத்தமானது இல்லை என சி.பி.ஐ. தலைமையிலான சிறப்பு விசாரணைக் குழு கண்டறிந்தது. இந்த பிரச்சினை முந்தைய ஒய்.எஸ்.ஆர். அரசாங்கத்தின் பரம்பரைப் பிரச்சினை. ஏற்கனவே கடந்த 2019 முதல் 2024-க்கு இடைப்பட்ட காலத்தில் திருப்பதியில் கலப்பட லட்டுகள் பரிமாறப்பட்டன."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஜார்கண்டில் 2 சிறுமிகளை காரில் கடத்திச்சென்று பாலியல் வன்கொடுமை

**ராஞ்சி, பிப்.23:**

ஜார்கண்ட் மாநிலம் கும்லா மாவட்டம் அராரா கிராமத்தில் 2 சிறுமிகள் ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு, தங்கள் வீட்டுக்கு இருசக்கர வாகனத்தில் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது, காரில் வந்த 4 பேர். 2 சிறுமிகளையும் தடுத்து நிறுத்தி, அவர்களை வலுக்கட்டாயமாக காரில் கடத்திச் சென்றனர்.

அவர்களை ஆள்நடமாட்டம் இல்லாத பகுதிக்கு தூக்கிச்சென்று 4 பேரும் கூட்டாக கற்பழித்தனர்.

இதுதொடர்பான புகாரின்பேரில், 4 பேரையும் 'போக்சோ' சட்டத்தின்கீழ் போலீசார் கைது செய்தனர். 4 பேரும் ஜார்கண்ட் மாநிலம் சிம்டேகா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் நீதி மன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர்.




## சென்னையில் தனியே வசித்த முதியவர் கொலை: நகைகளுடன் தப்பிய பிஹார் நண்பர் கைது

**சென்னை, பிப் .23:** துணிக்கடையில் ஒன்றாக வேலை பார்த்த முதியவரை கொலை செய்துவிட்டு, அவரது வீட்டில் இருந்து நகைகளுடன் பிஹாருக்கு தப்ப முயன்றவரை போலீஸார் கைது செய்தனர்.

புரசைவாக்கம் அரசப்பா தெருவைச் சேர்ந்தவர் பாலகிருஷ்ணன் (61). அண்ணா நகரில் உள்ள துணிக்கடையில் வேலை செய்து வந்தார். 2 ஆண்டுகளுக்கு முன்பு மனைவி காலமாகிவிட்டதால், தனியாக வசித்து வந்தார்.

நேற்று முன்தினம் இரவு இவரது வீட்டுக்கு அவரது அண்ணன் மகன் விக்னேஷ் வந்துள்ளார். வீட்டின் கதவு பூட்டி இருந்தது. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த விக்னேஷ். வீட்டுக்குள் பால கிருஷ்ணன் ரத்த வெள்ளத்தில் சடலமாக கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

தகவலின் பேரில் வேப்பேரி போலீஸார் வந்து, உடலை மீட்டு வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். வீட்டில் இருந்த 5 பவுன் தங்க நகைகள், வெள்ளிப் பொருட்கள் திருடப்பட்டிருந்தன.

பாலகிருஷ்ணனின் வீட்டுக்கு வெறுங்கையுடன் வரும் நபர் ஒருவர், பையுடன் வெளியேறும் காட்சி அருகே இருந்த கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகியிருந்தது. அவர், பாலகிருஷ்ணன் பணிபுரியும் துணிக்கடையில் தூய்மைப் பணியாளராக வேலை செய்யும் பிஹாரைச் சேர்ந்த ஷியாம் மாதேவ் (35) என்பது உறுதியானது.

அண்ணா நகரில் தங்கியிருந்த ஷியாமை போலீஸார் கைது செய்தனர். ஒரே இடத்தில் வேலை செய்ததால் பால கிருஷ்ணனும், ஷியாமும் நண்பர்களாக பழகி வந்துள்ளனர். சம்பவத்தன்றும் வழக்கம் போல பாலகிருஷ்ணனின் வீட்டில் இருவரும் மது அருந்தியுள்ளனர். பாலகிருஷ்ணன் போதையில் மயங்கிய பிறகு, அவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டு நகைகளை அவர் திருடிச் சென்றது தெரியவந்தது.

பிஹாருக்கு தப்பிச் செல்ல திட்டமிட்டிருந்த அவரை போலீஸார் சுற்றி வளைத்து கைது செய்துள்ளனர், அவரிடம் இருந்து நகைகள் முழுமையாக மீட்கப்பட்டன.

## சென்னை – அமைந்தகரையில் வீட்டு உரிமையாளர் கொலை: 3 பேருக்கு ஆயுள் தண்டனை

**சென்னை, பிப் .23:** அமைந்தகரையில் வாடகை வசூல் விவகாரத்தில் வீட்டின் உரிமையாளர் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் 3 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து சென்னை 4-வது கூடு தல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லியைச் சேர்ந்த சகோதரர்கள் பிரபு, கோட்டீஸ்வரன் இவர்களுக்கு சொந்தமாக அமைந்தகரையில் உள்ள வீட்டை வாடகைக்கு விட்டிருந்தனர். வீட்டில் வாடகைக்கு இருந்த கண்ணகி ஆறுமுகத்துக்கும் கோட்டீஸ்வரனுக்கும் வாகனம் நிறுத்துவது, கூடுதலாக குடிநீர் கேட்பது போன்ற விவகாரத்தில் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, வீட்டை காலி செய்யுமாறு கண்ணகி ஆறுமுகத்திடம் கோட்டீஸ்வரன் கூறியுள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக, கடந்த 2013ம் ஆண்டு மே 31ம் தேதி கண்ணகி ஆறுமுகத்தின் உறவினர் சிலம்பரசன் (23), ரஹ்மான் (23), ராஜ் (23), ஒரு சிறுவன் ஆகிய 4 பேரும் வீட்டின் முன்பு படுத்திருந்த கோட்டீஸ்வரனின் தலையில் சிமென்ட் கல்லால் தாக்கியுள்ளனர். இதில் கோட்டீஸ்வரன் உயிரிழந்தார்.

இதையடுத்து, 4 பேர் மீதும் கொலை உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் சூளைமேடு போலீஸார் வழக்கு பதிவு செய்து, அனைவரையும் கைது செய்தனர். சிறுவன் மீதான வழக்கு சிறார் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. மற்ற 3 பேர் மீதான வழக்கு விசாரணை, சென்னை 4 வது கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி ஆர்.கே.பீ.தமிழரசி முன்பு நடந்தது.

அவர் தனது தீர்ப்பில் கூறியதாவது: 3 குற்றவாளிகளும் வீட்டின் உரிமையாளரான கோட்டீஸ்வரனை கடந்த 2012ம் ஆண்டிலேயே தாக்கி, அவரது வலது கையை உடைத்துள்ளனர். இது தொடர்பாக அப்போதே போலீஸில் அவர் புகார் கொடுத்துள்ளார்.

முன் பகை காரணமாக 3 பேரும் சேர்ந்து கோட்டீஸ்வரனை கொலை செய்துள்ளனர் என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி காவல் துறை நிரூபித்துள்ளது. எனவே, 3 பேருக்கும் ஆயுள் தண்டனையும், தலா ரூ.25 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படுகிறது. இவ்வாறு நீதிபதி தீர்ப்பளித்தார்.

## தீவிரவாத அமைப்புடன் தொடர்பில் இருந்த 6 வங்கதேசத்தினர் கைது

**திருப்பூர், பிப் .23:** பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாகவும், பாதுகாப்பு படையினரை அச்சுறுத்தும் வகையிலும் டெல்லியில் சமீபத்தில் சுவரொட்டி ஒட்டப்பட்டது. இதை ஒட்டியவருக்கும், திருப்பூரில் ஊடுருவியுள்ள வங்கதேசத்தினருக்கும் தொடர்பு இருப்பதாக டெல்லி போலீஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, ஆய்வாளர் தலைமையில் 7 பேர் கொண்ட தனிப்படை போலீஸார் சில நாட்களுக்கு முன்னர் திருப்பூர் வந்தனர்.

தொடர்ந்து, அம்மாபாளையம், பல்லடம், ஊத்துக்குளியில் தங்கியிருந்த 6 பேரை போலீஸார் கைது செய்தனர். அவர்கள் வங்கதேசத்தை சேர்ந்த மிஜனூர் ரகுமான் (33), முகமது சாபேட் (35), உமர்(32), முகமது லிட்டன்(40), முகமது ஜாகீத் (40), முகமது உஜால்(29) என்பதும், பாதுகாப்புப் படைக்கு எதிராக சுவரொட்டி ஒட்டியவருடன் தொடர்பில் இருப்பதும் தெரியவந்தது. இதையடுத்து, திருப்பூர் ஜுடீசியல் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் எண்.3-ல் அவர்களை ஆஜர்படுத்திய போலீஸார், பின்னர் சென்னை சென்று, அங்கிருந்து அனைவரையும் டெல்லிக்கு அழைத்துச் சென்றனர்.

இதுகுறித்து திருப்பூர் போலீஸார் கூறும்போது, “டெல்லியில் ஒட்டப்பட்ட சுவரொட்டியில் காஷ்மீரை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, ஹிஸ்புல் முஜாஹதீன் அமைப்பைச் சேர்ந்தவர்களின் படங்கள் இடம் பெற்றிருந்தன. பயங்கரவாத அமைப்பை சேர்ந்த சிலரின் உத்தரவின் பேரில் போஸ்டர்களை ஒட்டியது தெரிந்தது. போஸ்டர் ஒட்டிய நபர்களுக்கும், திருப்பூரில் சட்டவிரோதமாக ஊடுருவியுள்ள வங்கதேசத்தை சேர்ந்த 6 பேருக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்ததால், அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து செல்போன்கள், போலியான ஆவணங்கள் உள்ளிட்டவற்றை டெல்லி போலீஸார் பறிமுதல் செய்துள்ளனர்” என்றனர்.



போளூர் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் வேலூர் வாசன் ஐ கேர் மற்றும் அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் இணைந்து கண் சிகிச்சை முகாம் 22.2.26காலை10.00 மணிக்கு டாக்டர்V. வெங்கட் பிரசாத் தலைமையில் நடைபெற்றது. விஜயகுமார் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஓய்வூதியர் சங்க நிர்வாகிகள் அபிபுல்லாகான், இராமலிங்கம், சரவணன், உதயகுமார், குமரேசன், மணி,இராமகிருஷ்ணன், மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.கண் அறுவை சிகிச்சை நபர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

## ’நாடகக் கலைக்கு முக்கியத்துவம்’ கொடுக்க கூடிய இயக்கம் தி.மு.க., தான்: ஜோதி எம்.எல்.ஏ., பெருமிதம்!



**செய்யாறு பிப் .23:** நாடகக் கலைக்கும் - கலைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த இயக்கம் தி.மு.க., தான் என, ராநகிராமத்தில் புதிய கலையரங்கம் திறப்பு விழாவில் ஜோதி எம்.எல்.ஏ., பெருமையாக பேசினார்.

செய்யார் அடுத்துள்ளது ராந்தம் கிராமம். இங்கு புதியதாக கட்டி முடிக்கப்பட்ட கலையரங்கத்தின் திறப்பு விழா நேற்று நடந்தது. ஒன்றிய செயலாளர்கள் தினகரன், ஜே.சி. கே. சீனுவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செய்யார் சட்டமன்ற உறுப்பினர் ஜோதி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு புதிய கலையரங்கத்தை ரிப்பன் வெட்டி மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து அவர் பேசியதாவது; ’கிராமப்புறங்களில் அரசால் நேரடியாக செய்ய முடியாத அடிப்படை பணிகளை சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து செய்யலாம் என, புது சட்டத்தை கொண்டு வந்தவர் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி தான். அந்தச் சட்டம் தான் இன்று வரையிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

நான் சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்ற பிறகு செய்யார் தொகுதியில் இதுவரை 150க்கும் மேற்பட்ட கலையரங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஒரு ஊராட்சியில் கலையரங்கம் கட்டப்படுகிறது என்றால் அதுதான் கடைசி பணியாகும். அதற்கு முன்பு குடிநீர், சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளது என, நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நாடகக் கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய இயக்கம் தி.மு.க., தான். கலைஞர் கருணாநிதி முதல்வராக இருந்த காலத்தில், நாடகத்திற்கும் - நாடகத்தை நடத்தி வரும் கலைஞர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார்.

வயது முதிர்ந்த நாடக கலைஞர்களுக்கு மாதா மாதம் ஓய்வூதியத்தையும் வழங்கியவர் இவர் தான். இன்றும் இந்த திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது;’ இவ்வாறு ஜோதி எம்.எல்.ஏ., பேசினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ., அன்பழகன், மூத்த பொறுப்பாளர் சேட்டு, மாவட்ட பிரதிநிதி பெருமாள், பிரகாஷ், எஸ்.எஸ்.குமார், கல்பட்டு பிரகாஷ், குணாநிதி, அவைத்தலைவர் கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் பூண்டி அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரியில் 70 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் கணினி அறிவியல் துறை மாணவர்கள் துறைகளுக்கு இடையிலான போட்டிகளில் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார்கள்.



உலகத்தாய்மொழி தினத்தில் நாகை ஆசைத்தம்பி அவர்களுக்கு தமிழ்மாமணி விருது வழங்கியத் தருணம்.

## மானாமதுரை ஆனந்த வல்லி சோமநாதர் கோவிலில் 70 ஆண்டுகள் கழித்து புதிய தேர் வெள்ளோட்டம் பக்தர்கள் திரண்டனர்




**மானாமதுரை, பிப் .23:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்று கரையில் உள்ள பிரசித்தி பெற்ற சந்திர பகவானின் தொழுநோய் குணம் பெற்ற ஸ்தலமாக உள்ள ஶ்ரீ ஆனந்த வல்லி அம்மன் சோமநாதர் கோவிலில் புதிதாக செய்யப்பட்டுள்ள சோமநாதர் தேருக்கான வெள்ளோட்ட விழா மற்றும் தேரடி கருப்பர் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஆனந்தவல்லி, சோமநா தர் கோவிலில் சித்திரை திருவிழாவின் போது தேரோட்டம் சிறப்பாக நடைபெறும்.70 வருடங்களுக்கு முன்பு தேரோட் டம் நடைபெறும் போது 2 பெரிய தேர்களில் தனித்த னியாக சுவாமியும், அம்மனும் நான்கு ரத வீதிகளின் வழியே வலம் வந்தனர். இதில் சோமதாதர் சுவாமி சென்ற தேர் சேதமடைந்ததை தொடர்ந்து தற்போது அம்மன் சென்ற பெரிய தேரில் சோமநாதர் சுவாமியும், அதற்குப் பின் னால் ஒரு சிறிய தேரில் அம்மனும் தேரோட்ட விழாவின்போது வீதி உலாவருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து சோமநாதர் சுவாமிக்கு புதிய தேர் செய்ய வேண்டுமென பக்தர்கள் கோரிக்கை விடுத்ததை தொடர்ந்து நன்கொடையாளர்கள் மற்றும் பக்தர்கள் உதவியுடன் 2 வருடங்க ளுக்கும் மேலாக புதிதாக தேர் செய்யும் பணி நடந்து முடிந்துள்ளது. மானாமதுரை ஆனந்தவல்லி, சோமநாதர் கோவில் வைரத்தேர் வெள்ளோட்ட விழாவிற்காக முகூர்த்தக்கால் கடந்த சில நாட்களுக்கு முன்பு நடைபெற்று புதிதாக உயர் ரக தேக்கு மரத்தால் செய்யப்பட்ட தேர்க்கு சோமநாதர் வைர தேர் பெயரிடப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை யாகசாலை பூஜைகள் தொடங்கி தேரில் உள்ள ஶ்ரீ கருப்பசுவாமிக்கு மகா அபிஷேகம் செய்து தீபாராதனை யுடன் தேர் வெள்ளோட்டம் நான்கு வீதியில் வலம் வந்து நிலை வந்தடைந்தது.

விழாவில் கலந்து கொண்ட மானாமதுரை முன்னாள் எம்எல்ஏ நகராட்சி தலைவர் மாரியப்பன் கென்னடிக்கு கோவில் சிவாச்சாரியார்கள் சால்வை அணிவித்து மரியாதை செய்தனர். புதிய தேரில் திருவிளையாடல் புராணம் சிற்பங்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள் மர சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. ஆனந்த வல்லி சோமநாதர் கோவில் கோபுரம் முன்பு நிறுத்தப்பட்டுள்ள புதிய தேரை ஏராளமான பக்தர்கள் பார்வையிட்டு வழிபாடு செய்து செல்கின்றனர்.

## மானாமதுரை பாபா கல்வி நிறுவனங்கள் 47-வது ஆண்டு விழா








**மானாமதுரை, பிப் .23:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் முதலில் தொடங்கப்பட்ட பாபா கல்வி நிறுவனங்கள் 47 வது ஆண்டு விழாவில் எல்கேஜி முதல் 2-ம் வகுப்பு மாணவர்களுக்கு காலை 9 மணி முதல் 1 மணி வரை மிகச்சிறப்பாக நடைபெற்றது. மானாமதுரை சரக காவல் சார்பு ஆய்வாளர் ததங்கமணி , தீ அணைப்பு துறை நிலைய ஆய்வாளர் ரமேஷ், அரசு பள்ளி தலைமை ஆசிரியர் அருண் மொழி பாலா கிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் கல்வியில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும், அவர்களின் பெற்றோர்களுக்கு பொன்னாடை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டது.

இவ்விழாவை முன்னிட்டு மாணவர்களின் பல்வேறு கலையரங்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாட்டுப்புற நடனம், நாடகம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை கவர்ந்தன. பிற்பகல் 2 மணிக்கு 3-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை நடைபெற்ற விழாவில் அரசு உயர் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியைகலையரசி ,, அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியைஇந்திரா தலைமையாசிரியை, பாஸ்கரன் இடைநிலை ஆசிரியர். பாலமுருகன் , முதுநிலை மேலாளர், பிரைட் ஆகியோர் தலைமையேற்று அறிவியல் கண்காட்சியில் முதல் மூன்று இடம்பிடித்த குழந்தைகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கி வாழ்த்துரை தெரிவித்தார்கள். விழாவில் மாணவர்கள் ஆடிய பாரம்பரிய கலைகளின் அணிவகுப்பு மக்கள் அனைவரின் கவனத்தையும் வெகுவாக கவர்ந்தது. விழாவில் பள்ளியின் நிறுவனர் திருமதி. இராஜேஸ்வரி அம்மா அவர்கள் முன்னிலை வகித்தார். பள்ளியின் தாளாளர் கபிலன் , பள்ளியின் நிர்வாகி மீனாட்சி தலைமையேற்று விழாவினை வழிநடத்தினர். பள்ளி முதல்வர் சாரதா ,துணை முதல்வர் ஆப்ரகாம் மற்றும் ஆசிரியர்கள் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.



மதுரை அருள்மிகு மீனாட்சி_சுந்தரேசுவரர்_ திருக்கோயில் மாசி_மண்டலத்திருவிழா-2026-22.02.2026-காலை-சுவாமி,அம்பாள் மரசப்பரம்
கரும்பும், கணை ஐந்தும், பாச அங்குசமும், கைக் கொண்டு அடியேன் திரும்பும் திசை தொறும் தோற்று கண்டாய் - இசை தேக்கு மணிச்சுரும்பு உண்ட காவியும், சோதி நிலாவும், துளிரும் சற்றே அரும்பும் கனம் குழலாய்! மதுராபுரி அம்பிகையே! -குலசேகர பாண்டியன் அருளிய மதுராபுரி அம்பிகை மாலை

# கவிதை நூல் வெளியீட்டு விழா



**செங்கல்பட்டு, பிப் .23:** செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் வட்டம் திருப்போரூரில் இயங்கி வரும் கவிமுரசு பாரதி பேரவை சார்பில் திருப்போரூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றும் முதுகலை ஆசிரியர் திரு மு குமார் அவர்கள் எழுதிய உணர்வின் துளிகள் என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று 17/02/26 மாலை ஐந்து முப்பது மணி அளவில் திருப்போரூரில் இயங்கிவரும் முதல்வன் கல்வி பயிற்சி நிலையத்தில் பால புரஸ்கார் விருதாளர் ஹைக்கூ கவிஞர் தமிழ் திசை நாளிதழின் மூத்த இணை ஆசிரியர் மு முருகேஷ் அவர்களால் வெளியிடப்பட்டது.

முதல் பிரதியை செங்கல்பட்டைசேர்ந்தஹைக்கூ கவிஞர் திரு சா கா பாரதிராஜா பெற்றுக்கொண்டார். நிகழ்ச்சிக்கு திருப்போரூர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி தெமினா கிரேனாப் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் திருப்போரூர் வாசகர் வட்டத்தின் தலைவர் திரு.ஆர் விஸ்வநாதன் துணைத் தலைவர் திரு தனஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சமூக செயல்பாட்டாளர் திரு சமரன், திரு ராமச்சந்திரன், தலைமை ஆசிரியர் ஸ்ரீதேவி, கவிஞர் சம்பத்குமார் கவிஞர் பன்னீர்செல்வம், கவிஞர் இரவிச்செல்வன் திருமதி லட்சுமி அம்மாள் மற்றும் திரு எ தாமோதரன், திரு ஜே எஸ் மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கவிஞர் கீதா பிரபு ஹைக்கூ கவிஞர் மு முருகேஷ் பற்றிய அறிமுக உரையாற்றினார்.

கவிமுரசு பாரதி பேரவையின் சார்பில் கவிஞர் சுபத்ரா திவாகரன் வரவேற்புரையாற்றினார்.

நெறி ஆளுகை டாப்பர்ஸ் நிறுவனர் திரு கோபாலகிருஷ்ணன் செய்தார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கவிமுரசு பாரதி பேரவையின் நிறுவனத் தலைவர் திரு உதய ஆதிமூலம் அவர்கள் செய்திருந்தார்கள். நன்றி உரை திருமதி வளர்மதி கவிமுரசு பாரதி பேரவையின் இணைச் செயலாளர் வழங்க, நிகழ்வு இனிதே நிறைவேறியது.

# விடுமுறை தினம், முகூர்த்த நாள் - திருச்செந்தூர் கோவிலில் குவிந்த பக்தர்கள்

**திருச்செந்தூர், பிப் .23:** முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து முருகனை தரிசனம் செய்கின்றனர்.

விடுமுறை நாட்களிலும், திருவிழா காலங்களிலும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து மட்டுமல்லாது வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் திருச்செந்தூர் வந்து முருகனை தரிசனம் செய்வார்கள்.

இந்த நிலையில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) விடுமுறை தினத்தை முன்னிட்டு பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்த பக்தர்கள் கோவில் முன்புள்ள கடலில் புனித நீராடி கோவிலில் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். இதனால் 100 ரூபாய் கட்டணம் தரிசனம், பொது தரிசன வரிசை மற்றும் மூத்த குடிமக்களுக்கான சிறப்பு தரிசன வரிசைகளில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

காலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. தொடர்ந்து சுவாமிக்கு விஸ்வரூப தீபாராதனை, அபிஷேக ஆராதனைகள் நடந்தது. அதைத்தொடர்ந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

மேலும் இன்று மாசி மாத வளர்பிறை முகூர்த்த தினத்தை முன்னிட்டு கோவில் முன்புள்ள சண்முக விலாஸ் மண்டபத்தில் 25-க்கும் மேற்பட்ட திருமணங்கள் நடைபெற்றது.

இதனால் கோவில் வளாகத்தில் பக்தர்கள் கூட்டம் மற்றும் திருமணத்திற்கு வந்தவர்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.

# செய்யாறில் 20 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பில் உலகத் தாய்மொழி தின விழா முன்னிட்டு முப்பெரும் விழா

## நூலகர் விருதாளர், திருக்குறள் பயிற்சியாளர் ஆகியோருக்கு பாராட்டு





**செய்யாறு, பிப் .23:** திருக்குறள் திருப்பணிகள் திட்டம்-செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கம் சார்பில் உலகத் தாய்மொழி தின விழா முன்னிட்டு முப்பெரும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் திருவண்ணாமலை மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை திருக்குறள் திருப்பணிகள் திட்டம்-செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கம் இணைந்து நடத்திய உலக தாய்மொழி தின விழா முன்னிட்டு தமிழ் அறிஞர்களின் படத்திறப்பு விழா, தாய்மொழி தின பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா, தமிழ்நாடு அரசு நல் நூலகர் விருது பெற்ற நூலகருக்கு பாராட்டு விழா, என முப்பெரும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு திருக்குறள் திருப்பணிகள் திட்ட பயிற்சியாளரும் ,செய்யாறு வட்ட முத்தமிழ்ச்சங்கத்தின் நிறுவனத் தலைவருமான கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கினார்.

கருத்தாளர் புலவர் ந. கனக சபை, இணை செயலாளர் ஆர். தேன்மொழி, பொருளாளர் க. கோவேந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயற்குழு உறுப்பினர் வா. இளவரசி வரவேற்றார். துணை செயலாளர் ஜே. பாபு நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் அன்பழகன், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் க. ஜெயகாந்தன், ஜே ஆர் சி கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செல்வத்திருமால் ஆகியோர் கலந்து கொண்டு திருக்குறள் குறித்தும் ,தாய்மொழி சிறப்பு குறித்தும், தமிழ் மொழியின் முக்கியத்துவம் குறித்தும் பேசினர்.

திருக்குறள் பயிற்சி மாணவியர்கள் வள்ளலார் மாநாட்டில் கலந்து கலந்துகொண்டு விருது பெற்றமைக்கு சால்வை அணிவித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது. தாய்மொழி தமிழ் குறித்து மாணவ, மாணவியர் பேச்சுப்போட்டில் கலந்து கொண்டு பின்னர் அவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசின் நல் நூலகர் விருதுப் பெற்ற நூலகர் ஜா. தமீமுக்கு சால்வை அணிவித்து பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர்கள் ப. பாலாஜி, எச் ,முபாரக், எச் .சுதாகர், அறிவொளி வெங்கடேசன், திருக்குறள் பயிற்சி மாணவர்கள், மாணவியர்கள், நிகழ்வில் கலந்து கொண்டனர் . முன்னதாக நிகழ்வில் திருக்குறள் பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமாருக்கு அறிவொளி வெங்கடேசன் ,நல் நூலகர் ஜா. தமீம் ஆகியோர் பாராட்டி சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கினார். முடிவில் செயற்குழு உறுப்பினர் ச. கவிதா தாய்மொழி கவிதை வாசித்து நன்றி கூறினார்.

# செய்யாறு அருகே முனுகப்பட்டு பச்சையம்மன் கோயில் ஜீர்ணோதாரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

## திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம்





**செய்யாறு, பிப் .23:** செய்யாறு அடுத்த அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி கோயில் மகா கும்பாபிஷேகம் நேற்று காலை வெகு விமர்சையாக நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம் , முனுகப்பட்டில் எழுந்தருளியுள்ள அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி கோயில் இந்து சமய அறநிலைத்துறையால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு கட்டங்களாக புனரமைக்கப்பட்டது.

முழுவதுமாக புனரமைக்கப்பட்ட நிலையில், அருள்மிகு ஸ்ரீ பச்சையம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுமுன்னர் நேற்று முன்தினம் 21ஆம் தேதி சிவாச்சாரியார்களால் யாகசாலை அமைத்து கணபதி ஹோமம் ,நவகிரக ஹோமம் ,உள்ளிட்ட நவகுண்ட யாகம் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடைபெற்றது.

நேற்று 22 ஆம் தேதி யாகசாலை பூஜை ,கலச பூஜை ,சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு ,கலச புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது .பின்னர் காலை 10:30 மணிக்கு மேல் அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி கோயில் கோபுர கலசத்திற்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேக வைபவம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு புனித நீரை பெற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

நிகழ்வில் எம்எல்ஏ ஓ.ஜோதி , ஒன்றிய செயலாளர்கள் எஸ் .ராஜ்குமார், ஜே .சி .கே. சீனிவாசன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், அறங்காவல் குழு பொறுப்பாளர்கள், கட்சி பிரமுகர்கள் உபயதாரர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மகா கும்பாபிஷேக திருவிழாவிற்கான ஏற்பாடுகளை கோயில் திருப்பணி விழா குழுவினர்கள், ஊர் பொதுமக்கள், கோயில் பணியாளர்கள், அறங்காவலர்குழு உறுப்பினர்கள் செய்திருந்தனர்.



21.02.2026-அன்று பாளையங்கோட்டையில் நடந்த திருக்குறள் திருப்பணிகள் திட்ட 30-ஆவது நிறைவு நிகழ்ச்சியில் கவிஞர் பேரா திருக்குறள் நூல்களை பரிசாக வழங்கினார்.




# 5 ஆண்டு திமுக ஆட்சியில் வீட்டுக்கு ரூ.5.30 லட்சம் இழப்பு: அதிமுக குற்றச்சாட்டு

**சென்னை, பிப்.23:** கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சராசரியாக ரூ.5.30 லட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, அதிமுக தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது: கடந்த 5 ஆண்டுகால ஆட்சியால் மக்கள் படும் இன்னல்களை வீடுதோறும் கொண்டு சேர்க்க,விடியா ஆட்சி - உங்கள் வீட்டு பில்லே சாட்சி என்ற பெயரில் மின் கட்டணம், சொத்து வரி, வீட்டு வரி ரசீதை வழங்கி மக்களுக்கு உண்மை நிலையை உணர்த்தும் பிரச்சாரம் கடந்த ஜன.28ம் தேதி முதல் நடந்து வருகிறது. இதுவரை 1.04 கோடி குடும்பங்களை நாம் சென்று சேர்ந்துள்ளோம்.

ரூ.11.66 லட்சம் கோடி இழப்பு: மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து பூத்களிலும் இந்த பிரச்சாரத்தை மேற்கொள்ள ஏதுவாக, பிரின்டர் கருவிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த திமுக ஆட்சியால் சரா சரியாக ஒரு வீட்டுக்கு ரூ.5.30 லட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. அதன்படி, தமிழகம் முழுவதும் உள்ள 2.20 கோடி குடும்பங்களுக்கு கணக் கிட்டால், ஒட்டுமொத்தமாக ரூ.11.66 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

முகத்திரை கிழிக்கப்படும்: அமலாக்கத் துறை அனுப்பிய ஊழல் விவரங்களின் அடிப்படையில் கே.என்.நேரு மீது வழக்கு பதிவு செய்யக் கோரி அதிமுக வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கில், அமைச்சர் நேரு மீது வழக்கு பதிவு செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நகராட்சி நிர்வாகம் எனும் ஒரு துறையிலேயே ரூ.1,020 கோடி ஊழல் என்றால், இன்னும் எத்தனை துறைகள், எத்தனை ஊழல்கள். இன்னும் இரண்டே மாதங்கள்தான். அதிமுக ஆட்சி அமைந்ததும் எல்லா ஃபைல்களும் திறக்கப்படும். முகத்திரைகள் கிழிக்கப்படும். இவ்வாறு அதில் பதிவிடப்பட்டுள்ளது.

# "ஜெயலலிதா, எம்ஜிஆர் ஆன்மா ஓபிஎஸ்-ஸை மன்னிக்காது" - கடம்பூர் ராஜூ காட்டம்

**கோவில்பட்டி, பிப்.23:** கோவில்பட்டியில் சட்டப்பேரவை உறுப்பினர் கடம்பூர் செ.ராஜூ செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக முதல்வரை சந்திப்பதோ, திமுகவில் இணைவதோ ஒருவருடைய தனிப்பட்ட விருப்பம். அதை விடுத்து, "எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆசியுடன் ஸ்டாலின் முதல்வர் ஆவார்" என்று, ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார். இதை அவரது மனசாட்சியே ஒப்புக் கொள்ளாது. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆன்மா ஒரு காலமும் அவரை மன்னிக்காது. அதற்காக நிச்சயம் அவருக்கு தண்டனை உண்டு.

'என்னுடைய அரசியல் லாபத்துக்காக திமுகவுக்கு செல்கிறேன்' என்று சொன்னால், எங்களுக்கு எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. 1989-ம் ஆண்டு தேர்தலில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக வேலை பார்த்தவர் தான் ஓபிஎஸ். இவற்றை எல்லாம் மன்னித்துதான் ஓ.பன்னீர் செல்வத்துக்கு நகர்மன்ற உறுப்பினர், முதல்வர் பதவிகளை வழங்கியவர் ஜெயலலிதா.

திமுகவை எதிர்த்துதான் அதிமுகவை மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். தொடங்கினார். அதிமுகவுக்கு அரசியல் நேர் எதிரி திமுக தான். தீய சக்தி என்ற அடைமொழியோடு திமுகவை நாட்டு மக்களுக்கு அடையாளப்படுத்தியவர் எம்.ஜி.ஆர். அதிமுக தொண்டர்களை எம்.ஜி.ஆர். ரத்தத்தின் ரத்தங்கள் என்றுதான் அழைப்பார். அதிமுக ரத்தம் இருக்கும் வரை தொண்டர்கள் துரோகம் செய்ய மாட்டார்கள்.

ஆனால், இன்றைக்கு ஓபிஎஸ் உடலில் ஓடுவது அதிமுக ரத்தமா..? என்பதற்கு அவர்தான் பதில் சொல்ல வேண்டும். எவ்வளவு நம்பிக்கை துரோகமாக இந்த இயக்கத்தில் பணியாற்றி இருந்திருக்கிறார் என்பது இன்றைக்கு அப்பட்டமாக வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

இரட்டை இலை சின்னத்துக்கு வாக்களித்தவர்கள் ஒரு இலையை எம்ஜிஆராகவும், மற்றொரு இலையை ஜெயலலிதாவாக பார்ப்பார்கள். வேறு சின்னத்துக்கு வாக்களிக்க மாட்டார்கள். விஜய்யை பார்த்து திமுகதான் பயப்படுகிறது. அதற்காகத்தான் இருக்கிற கட்சி, போன கட்சி, வந்த கட்சி என இடம் இருக்கோ இல்லையோ, எல்லாரையும் சேர்த்து திமுக ஓவர் லக்கேஜ் ஆகிவிட்டது.

ஓவர் லக்கேஜ் வண்டி ஓடாது. கூட்டணி என்ற பெயரில் இருக்கிற கட்சிகளை எல்லாம் இழுத்து போடுகின்றனர். எந்த கட்சியாலும் அதிமுக வாக்கு வங்கியை பாதிக்க முடியாது. வரும் தேர்தலில் வெற்றி பெறப்போவது அதிமுக கூட்டணி தான். எங்கள் கூட்டணி வெற்றிக் கூட்டணி. 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

# 'திராவிட மாடல்' என்ற மாயையை மக்கள் உணர்ந்து விட்டனர்: தமிழக பாஜக

**சென்னை, பிப்.23:** 'திராவிடமாடல் என்ற மாயையை தமிழக மக்கள் உணர்ந்து விட்டனர்' என பாஜக மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கை: திமுக தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட 505 வாக்குறுதிகளில் 99 சதவீதத்தை நிறைவேற்றி விட்டதாகக் கூறிக் கொள்வது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. உண்மையில், 345 வாக்குறுதிகள் மீது எந்த முன்னேற்றமும் இல்லை. 160 வாக்குறுதிகள் மட்டுமே அரைகுறையாகத் தொடங்கப் பட்டுள்ளன. முக்கியமான 9 வாக்குறுதிகள் முற்றிலுமாகத் தோல்வியடைந்துள்ளன.

தமிழகத்தில் வாரிசு அரசியல், சாதிய வாதம் மற்றும் வகுப்பு வாதம் ஆகியவை மாநில முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாக உள்ளன. குறிப்பாக, ஒவ்வொரு திட்டத்திலும் 20 சதவீதம் ஊழல் பிரீமியம் வசூலிக்கப்படுகிறது. விலைவாசி உயர்வால் சாமானிய மக்கள் நசுக்கப்பட்டுள்ளனர். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் சட்டம்- ஒழுங்கு சீர்குலைந்து, நிர்வாகத் திறமையின்மை நிலவுகிறது. கல்வி மற்றும் சுகாதாரம் உள்கட்டமைப்பு வசதிகள் சிதைந்து குறைந்துவிட்டது.

அவசர நிலை காலத்தில் ஸ்டாலின் சிறையில் அடைக்கப்பட்டது, சர்க்காரியா கமிஷன் மூலம் கருணாநிதியை ஊழல் வாதியாக சுட்டிக்காட்டியது போன்ற வரலாறுகளை மறந்துவிட்டு இன்று காங்கிரஸும் திமுகவும் கைகோத்துள்ளன. இந்த 'திராவிட மாடல்' என்ற மாயையை தமிழக மக்கள் உணர்ந்துவிட்டனர். எனவே, 2026 தேர்தலில் பழனிசாமி தலைமையிலான அதிமுக- பாஜக உள்ளடக்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணி அமோக வெற்றி பெற்று, தமிழகத்தில் 'இரட்டை எஞ்சின்' ஆட்சியை அமைக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM